



விலை ரூபா 40

பக்கங்கள் - 12

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 49 குரோதி வருடம் மார்கழி மாதம்
02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1446 ஜமாதுல் ஆகிரா 15 (17.12.2024)





# ஜனாதிபதி அநுரவுக்கு டில்லியில் மகத்தான வரவேற்பு

( ஆர்.மனோசங்கர் )

இந்தியாவுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை வரவேற்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (16) காலை இந்திய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லமான ராஷ்டிரபதி பவனில் நடைபெற்றது.

குதிரைப்படை அணிவகுப்புடன் ராஷ்டிரபதி பவனுக்கு அழைத்து வரப்பட்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரினால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதன்போது பூரண அரச மரியாதையுடன் 21 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு ஜனாதிபதி

02 →



## இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதற்கு

# இலங்கையை பயன்படுத்த ஒருபோதும் இடமளியேன்

( ஆர்.மனோசங்கர் )

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (16) பிற்பகல் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான ஹைதராபாத் மாளிகையில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, இரட்டைவரி விதிப்பைத் தடுப்பது மற்றும் அரச அதிகாரிகளின் திறன், மேம்பாடு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இந்திய-இலங்கை தலைவர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டன. இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையில் இலங்கைக்கு விசேடமான இடமுள்ளது

02 →



**இரட்டை வரிவிதிப்பை தவிர்க்க இரு தரப்பும் ஒப்பந்தம்**

**யாழ், கிழக்கு பல்கலைகளில் மாதாந்தம் 200 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்**

**1500 அரச ஊழியர்களுக்கு இந்தியாவில் பயிற்சி**

**இலங்கை வருமாறு மோடிக்கு அநுர அழைப்பு**

## சபாநாயகர் பதவிக்கு ஜகத் விக்ரமரத்ன

**தேசிய மக்கள் சக்தி தீர்மானம்**

அசோக ரன்வலவால் வெற்றிடமான நாடாளுமன்ற சபாநாயகர் பதவிக்கு ஜகத் விக்ரமரத்னவை நியமிக்க தேசிய மக்கள் சக்தியின் அரசியல் உயர்பீடங்கள் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நேற்று அவரது பெயர் கட்சியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு,

02 →

## நீதியமைச்சர் சிஐடியில் முறைப்பாடு

நாடாளுமன்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தனது பெயருக்கு முன்னால் பொய்யான தரவுகள் பதிவேற்றப்பட்டமை தொடர்பில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் நேற்று (16) முறைப்பாடு செய்தார்.

தமக்கு அவதூறு ஏற்படுத்தும் நோக்கில் அல்லது தனது அரசியல் மீதான

02 →

### மனித பாவனைக்கு உதவாத

## 75,000 கிலோகிராம் அரிசி தனியார்துறையால் இறக்குமதி

(கனுஷியா புஷ்பகுமார்)



இரு தனியார் இறக்குமதி யாளர்களினால் இறக்குமதி செய்யப்ப ட்ட 03 கொள்கலன்களில் காணப்பட்ட 75,000 கிலோகிராம் அரிசி மனித பாவனைக்குத் தகுதியற்றது என உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர்களால் இனங்காணப்பட்டுள்ளது.

அதன்படி, அந்த அரிசித் தொகையை திருப்பி அனுப்புமாறு இலங்கை சுங்க

02 →

## நாமலின் கல்வித் தகைமை: சிஐடியில் முறைப்பாடு

(கனுஷியா புஷ்பகுமார்)



நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச சட்டம் தொடர்பான தனது உயர்நிலைக் கல்வித் தகைமையை மோசடியான முறையில் பெற்றுக்கொண்டுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலஞ்சம், ஊழல் தொடர்பான அதிகார சபையின் தலைவர் ஜமுனி காமந்ர துஷாரவினால் நேற்று (16) குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் மேற்படி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாமல் ராஜபக்சவின் சட்டத்தரணி பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைபெற்ற சட்டக் கல்லூரி பரீட்சையின் போது நாமல் ராஜபக்சவுடன் தோற்றிய பரீட்சார்த்தியான

02 →

### தென் கொரிய ஜனாதிபதி பதவிநீக்கம்;

## அரசியலமைப்பு நீதிமன்றில் விசாரணைகள் ஆரம்பம்



இராணுவச் சட்டத்தை அமுல்படுத்தும் முயற்சியில் தோல்வியடைந்ததற்காகபதவியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி யூன் சுக் யோலின் (Yoon Suk Yeol) பதவி நீக்கம் தொடர்பான விசாரணையை தென் கொரியாவின் அரசியலமைப்பு நீதிமன்றம் திங்களன்று (16) தொடங்கியது.

தென் கொரியாவின் நாடாளுமன்றத்தால் சனிக்கிழமையன்று யூன் சிவிலியன் ஆட்சி யை இடைநிறுத்துவதற்கான அவரது குறுகிய கால

02 →

## மாணவி விபத்தில் பலி

### தந்தை கண்முன்னே சம்பவம்

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி,கெட்டம்பே மஹாநாம கல்லூரியில் உயர்தரம் பயிலும் 17 வயது மாணவி கண்டி சுதுஹும்பொல பிரதேசத்தில் நேற்று (16) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்துள்ளார். உயர்தர தனியார் வகுப்பில் கலந்துகொள்வதற்காக குறித்த மாணவி தனது தந்தையுடன் மோட்டார்

02 →

## இலங்கையில் இன ஐக்கியத்துக்கு மாகாண சபைகள் அவசியம்

### தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் என இந்தியா வலியுறுத்தல்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)



இலங்கையில் இன ஐக்கியம் மற்றும் உண்மையான நீதியை நிலைநாட்ட மாகாண சபைகள் இருப்பதன் அவசியத்தை எடுத்துரைத்துள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி, மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திசா நாய க்கவிடம் வலியுறுத்தியுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மூன்றுநாள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்திய

02 →

## வெள்ளத்தில் மூழ்கிய கிராமம்



(அப்துல்சலாம் யாசீம் )

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் திருகோணமலை மட்டக்கலி பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதை படத்தில் காணலாம்.

# பிரிக்ஸில் இலங்கையை இணைக்குமாறு மோடியிடம் அநுர வேண்டுகோள்



(சுப்ரமணியம் நிஷாந்தன்)

இலங்கையை பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பில் இணைத்துக்கொள்வது தொடர்பில் சாதகமாக பரிசீலிக்கப்படும் என இந்தியா உறுதியளித்துள்ளது.

ரஷ்யா, சீனா, இந்தியா, பிரேசில் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டமைப்பில் உருவாக்கப்பட்டு உலகின் பலம்வாய்ந்த பொருளாதார அமைப்பாக இயங்கும் பிரிக்ஸில் இணைவதற்காக இலங்கை அரசாங்கம் கடந்த ஆண்டு கோரிக்கை முன்வைத்திருந்தது. தற்போதைய அரசாங்கமும் அந்த கோரிக்கையை கடந்த பிரிக்ஸ் நாடுகளின் கூட்டத் தொடர்பில் முன்வைத்திருந்தது.

பிரிக்ஸில் இணைவதற்கு இலங்கை முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், இம்முறை தலைமை பொறுப்பை ஏற்றுள்ள ரஷ்யா, இலங்கையின் கோரிக்கை நிராகரிக்கப்படவில்லை என கூறியிருந்தது.

இந்த நிலையில் உத்தியோகபூர்வ பயணமாக இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று திங்கட் கிழமை இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த போது இது தொடர்பில் இலங்கையின் நிலைப்பாட்டையும் பிரிக்ஸ ில் இணையும் விருப்பத்தையும் மீண்டும் வெளிப்படுத்திய தாக இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி நேற்று மாலை புதுடில்லியில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது கூறியிருந்தார்.

அத்துடன், இலங்கையின் கோரிக்கையை சாதகமான முறையில் பரிசீலிக்கும் உறுதிமொழியை பிரதமர் மோடி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் வழங்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## சபாநாயகர்...

இன்று சபாநாயகர் பதவி வெற்றிடத்தை அறிவிக்கும் போது, நாடாளுமன்ற கூட்டத் தொடரின் தொடக்கத்தில் முன்மொழியப்படும் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.எதிர்க்கட்சியினாலும் சபாநாயகரின் பெயர் முன்மொழியப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்திருந்த போதிலும், அது நெறிமுறையற்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வேறு பெயர் பரிந்துரைக்கப்பட்டால், அந்த பெயரை தெரிவு செய்ய இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும். கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் பட்டம் பெற்றவராவார்.

அவர் பொலன்னறுவை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய மக்கள் சக்தியின் கீழ் 51,391 விருப்பு வாக்குகளைப் பெற்று அந்த மாவட்டத்தின் விருப்பு வாக்கு பட்டியலில் இரண்டாவதாக தெரிவு செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நீதியமைச்சர்...

நம்பிக்கையை உடைக்கும் நோக்கில் எவரேனும் பொய்யான தகவல்களை உள்ளீடு செய்துள்ளனரா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் "கலாநிதி ஹர்ஷன நாணயக்கார" என பதிவிடப்பட்டிருந்தமை தொடர்பில் அமைச்சரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அது திருத்தப்பட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பெயர்களை பதிவேற்றியதில் தவறு இருப்பதாக நாடாளுமன்ற தலைமைச் செயலகம் கடிதம் அனுப்பியதாகவும் நீதி அமைச்சர் இதன்போது கூறியுள்ளார்.

எனினும் இது குறித்து தற்போது குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி...

அநுரகுமார திசாநாயக்க வரவேற்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து இந்திய இராணுவத்தின் அணிவகுப்பு மரியாதை வழங்கி அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதன்பின், இருதரப்பு பிரதிநிதிகளும் இரு நாட்டு தலைவர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டனர். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் உத்தியோகபூர்வ வரவேற்பு நிகழ்வில் இராஜதந்திரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

உத்தியோகபூர்வ வரவேற்பு நிகழ்வைத் தொடர்ந்து, ராஜ்கொட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவுச் சின்னத்திற்கு ஜனாதிபதி அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் தனது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயத்தை நினைவுகூரும் வகையில் ராஜ்கொட்டில் உள்ள காந்தி தர்ஷன் வளாகத்தில் அசோக மரக்கன்று ஒன்றை நாட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, விருந்தினர் புத்தகத்திலும் கையொப்பமிட்டார்.

பிரதமர் நரேந்திர மோடிக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு நேற்றைய தினம் (16) நடைபெற்றது. அதேபோல், இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவிற்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று இரவு நடைபெற்றிருந்தது.

அதேவேளை, இந்திய துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கர் மற்றும் நிதி மற்றும் நிறுவன விவகார அமைச்சர் நிர்மலா சீதாராமன், சுகாதார அமைச்சர் ஜே.பி.நட்டா ஆகியோரையும் ஜனாதிபதி நேற்று சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

## தென்கொரிய...

முயற்சியால் நீக்கப்பட்டார்.

இது நாட்டை பல ஆண்டுகளில் மிக மோசமான அரசியல் கொந்தளிப்புக்குள் தள்ளியது. பதவி நீக்கத்தை உறுதி செய்ய வேண்டுமா என்பதை தீர்மானிக்க அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கு சுமார் ஆறு மாதங்கள் கால அவகாசம் உள்ளன. அவர் பதவி நீக்கப்பட்டால் இரண்டு மாதங்களுக்குள் புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இந்த நிலையில், யூன் சுக் யோலின் பதவி நீக்கம் தொடர்பான நடவடிக்கைகளை தென் கொரியாவின் அரசியலமைப்பு நீதிமன்றம் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு முறைப்படி ஆரம்பித்தது.

யூனுக்குப் பதிலாக பிரதமர் ஹான் டக்-சூ (Han Duck-soo) தென்கொரியாவின் இடைக்காலத் ஜனாதிபதியாக பணியாற்றுகிறார்.

விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், யூன் பயணத் தடையினை எதிர்கொண்டுள்ளார்.

இதனிடையே, கிளர்ச்சி குற்றச்சாட்டுகள் தொடர்பாக பாதுகாப்பு புலனாய்வுக் கட்டளையின் தற்போதைய மற்றும் முன்னாள் தலைவர்கள் இருவரையும் ஞாயிற்றுக்கிழமை (15) பொலிஸார் கைது செய்ததாக தென்கொரிய செய்தி நிறுவனமான யோன்ஹாப் கூறியுள்ளது.

அதேநேரம், இராணுவ சிறப்புப் போர்க் கட்டளைத் தலைவரான குவாக் ஜாங்-கியூனுக்கு எதிராக பிடியாணை கோருவதாகவும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இராணுவச் சட்ட முயற்சியின் போது நாடாளுமன்றத்திற்கு சிறப்புப் படை வீரர்களை அனுப்பியதாக குவாக் மீது குற்றம் சாட்டப்பட்டது, இது படையினருக்கும் நாடாளுமன்ற ஊழியர்களுக்கும் இடையே மோதலை ஏற்படுத்தியதாகவும் குறிப்பிட்டது.யூன், கடந்த டிசம்பர் 3 ஆம் திகதி முன்வைத்த இராணுவச் சட்டம், தென் கொரியாவில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக முதன்முறையாக, அரசியல் குழப்பத்தை உருவாக்கிய அதேவேளை அவரை வெளியேற்றுவதற்கு அழைப்பு விடுக்கும் பெரிய எதிர்ப்புகளுக்கும் வழிவகுத்தது.

யூனுக்கு எதிரான பரந்த எதிர்ப்புகள், அவருக்கு ஆதரவாக சிறிய பேரணிகள், அவரது இராணுவச் சட்ட ஆணையிலிருந்து தென் கொரிய தலைநகரை உலுக்கியது. எனினும், பெரிய வன்முறை அல்லது எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இராணுவச் சட்டம் ஆறு மணி நேரம் மட்டுமே நீடித்தது, பின்னர் தேசிய சட்டமன்றம் ஒருமனதாக அதை நீக்குவதற்கு வாக்களித்ததைத் தொடர்ந்து சடத்தை நீக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இந்த நிலையில் சனிக்கிழமையன்று (14) யூன் இரண்டாவது பதவி நீக்க வாக்கெடுப்பை எதிர்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில்...

தலைநகர் புதுடில்லிக்குச் சென்றார். இந்தப் பயணத்தில் இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் உட்பட பல்வேறு தரப்பினரை அவர் சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்று திங்கட்கிழமை பிரதமர் மோடியுடன் இருதரப்பு சந்திப்பை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நடத்தியிருந்தார். இந்த சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் விக்ரம் மிஸ்ரி நேற்று மாலை புதுடில்லியில் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தினார். இதன்போது 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இருவருக்கும் இடையில் பேசப்பட்டதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த வெளியுறவு அமைச்சின் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பல சந்தர்ப்பங்களில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக தேர்தல் காலங்களில் அவர் இதுகுறித்து கூறியிருந்தார்.

வடக்கு, கிழக்கு உட்பட பல பகுதிகளில அவருக்கு ஆதரவு கிடைக்கப்பெற்றது. தமிழ் மக்கள் தொர்பிலான விவகாரம் நீண்டகாலமாக பேசப்படும் பிரச்சினை. இருதரப்பு பேச்சுகளில் இந்த விடயங்கள் தொடர்பில் சில விடயங்களில் பேசப்பட்டது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதன் அவசியத்தை பிரதமர் மோடி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் எடுத்துரைத்ததுடன், இன ஐக்கிய மற்றும் உண்மையான நீதிக்கு மாகாணங்களின் அவசியம் தொடர்பிலும் பேசப்பட்டது." என்றார்.

## மனித பாவனைக்கு...

அதிகாரிகள் இரு இறக்குமதியாளர்களுக்கும் அறிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக கடந்த 4ஆம் திகதி அரிசி இறக்குமதிக்கு அரசாங்கம் அனுமதி வழங் கியதை அடுத்து சுமார் 3000 மெற்றிக் தொன் அரிசியை இறக்கும தியாளர்கள் இறக்குமதி செய்துள்ளனர்.

இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு கொள்கலன்களில் 50,000 கிலோகிரோம் அரிசி பாவனைக்கு உதவாதவை மற்றும் 25,000 கிலோ அரிசி இறக்குமதி விதிமுறைகளை மீறி தயாரிப்பு தகவல் லேபிள்கள் மாற்றியமைக்கப்பட்டமை என்ன கண்டுபிடிக்கப்பட்டதால் துறைமுகத்திலிருந்து அவற்றை விடுவிக்கப்படுவது நிறுத்தப்பட்டது.

சுங்கத்திற்கு கொண்டு வரப்பட்ட 90 வீதத்திற்கும் அதிகமான அரிசி கையிருப்புகளை விடுவிப்பதற்கு சுங்கத்துறை தலையிட்டுள்ளதுடன், திருப்பி அனுப்பப்படும் என அறிவிக்கப்பட்ட 03 கொள்கலன்களில் உள்ள அரிசியை திருப்பி அனுப்பாவிட்டால், அவற்றைப் பறிமுதல் செய்து அழிக்கும் அதிகாரம் சுங்கத்திற்கு உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மாணவி....

சைக்கிளில் கெலிஓயாவிலிருந்து கண்டி நோக்கி வந்து கொண்டிருந்த போது இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மழையுடன் கூடிய காலநிலை காரணமாக கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி விழுந்த மாணவி பாதையில் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றின் சில்லில் அகப்பட்டதாக பொலிஸ ாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் மாணவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற தந்தைக்குக் காயம் எதுவும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர் கெலிஓய பெத்தியகொட பகுதியைச் சேர்ந்த இஷ ால தேஷானி கெதிக்கெனல்ல என்ற மாணவி ஆவார்.

சம்பவத்தின் பின்னர், தனியார் பஸ் ஸின் சாரதி கண்டி பொலிஸ் போக்குவரத்து பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டனர்.

## நாமலின்...

துஷார ஜயரத்ன, நீதியரசரிடம் எழுத்துமூலம் வழங்கிய முறைப்பாடு தொடர்பில் முறையான விசாரணையை ஆரம்பிக்குமாறு குறித்த முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

முறைப்பாடு வழங்கியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

"2010ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைபெற்ற சட்டக்கல்லூரி பரீட்சையில் நாமல் ராஜபக்ச, சட்டக்கல்லூரி இறுதிப் பரீட்சையின் வினாத்தாளை முன்கூட்டியே பெற்று, இணைய வசதியுடன் கூடிய கணினியுடன் கூடிய விசேட அறையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றி, எதேச்சதிகாரமாக நடந்துகொண்டமை தொடர்பில், குறித்த இளைஞர் அன்றைய தினம் பரீட்சை கடமையிலிருந்த மண்டபத் தலைவர், சட்டக்கல்லூரி அதிபர், பதிவாளர் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அவர்கள் முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட போதிலும் இது தொடர்பான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாத காரணத்தால் தான் நீதியமைச்சின் அப்போதைய செயலாளர் சுஹத கம்லத்திடம் சென்றதாகவும், ஆனால் அவர் இந்த முறைப்பாட்டைக் கவனத்தில் கொள்ள மறுத்ததாகவும் தெரியவருகிறது.

இதன் பின்னர் குறித்த இளைஞன் தமது பாதுகாப்பு கருதி நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.இதனால் சாட்சியங்களை பெற்று முறையான விசாரணைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் இது தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் முறைப்பாடு செய்துள்ளேன்" என்றார்.

இந்த முறைப்பாட்டின் காரணமாக, இரண்டு முறை கடத்திச் செல்லப்பட்டு, தனது சொந்த வீட்டில் ஆவணங்களில் கையொப்பமிட வற்புறுத்தப்பட்டதாகவும், துப்பாக்கிச் சூட்டில் தன்னைக் கொல்லும் முயற்சியில் இருந்து தனது உயிரைக் காப்பாற்றியதாகவும், இறுதியாக நாட்டை விட்டு வெளியேற நேரிட்டதாகவும் குறித்த இளைஞர் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

எவ்வாறாயினும், அண்மையில் சபாநாயகர் அசோக ரன்வலவின் கலாநிதி பட்டம் தொடர்பில் எழுந்த சர்ச்சைகள் காரணமாக பதவி விலகியதையடுத்து, போலியான கல்வித் தகைமைகள் கொண்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலக வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இந்திய பாதுகாப்பு...

என்பதை தாம் நன்கு அறிவதாக கூட்டுச் செய்தியாளர் சந்திப்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நினைவு கூர்ந்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனது முதலாவது வெளிநாட்டு விஜயத்திற்காக இந்தியாவை தெரிவு செய்தமை தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைவதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி இதன்போது தெரிவித்தார்.

எதிர்கால நோக்குடன் இருநாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை புதிய கோணத்தில் கொண்டு செல்லும் வகையில் பௌதீக, டிஜிட்டல் மற்றும் எரிசக்தி ஆகிய பிரதான தூண்களை பலப்படுத்துவதற்காக இலங்கைக்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதும், இரு நாடுகளுக்குமிடையே மின்சார வலையமைப்பு இணைப்பு மற்றும் பால் உற்பத்தி, பெற்றோலியக் குழாய் இணைப்பை ஏற்படுத்துவது என்பன குறித்தும் இக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்திய அபிவிருத்தி ஒத்துழைப்பை தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில், அநுராதபுரம் புகையிரத பாதை சமிக்ஞைக் கட்டமைப்பு மற்றும் காங்கேசன்துறை துறைமுக புனரமைப்பு என்பவற்றுக்கு உதவி வழங்குவது தொடர்பிலும் இதன் போது நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தியக் கல்வி ஒத்துழைப்பின் கீழ் அடுத்த வருடம் முதல் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு மாகாண பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு மாதாந்த புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. அடுத்த ஐந்து வருடங்களில் 1500 இலங்கை அரச ஊழியர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்க இந்தியப் பிரதமர் உடன்பாடு தெரிவித்தார்.

அத்தோடு வீடமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் உள்கட்டமைப்பு ,இலங்கையில் விவசாயத்துறை, பால் உற்பத்தித்துறை மற்றும் கடற்றொழில்துறை முன்னேற்றம் என்பவற்றுக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கும்.

இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இலங்கை மண்ணை பயன்படுத்த ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இங்கு தெரிவிதார்.

பாதுகாப்பு ஒத்துழைப்பின் (Colombo Security Conclave)கீழ் கடல்சார் பாதுகாப்பு, பயங்கரவாத ஒழிப்பு , இணையப் பாதுகாப்பு, கடத்தல் மற்றும் திட்டமிடப்பட்ட குற்றங்களுக்கு எதிராக போராடுதல், மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரணம் போன்ற விடயங்களில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து உரையாற்றிய பிரதமர் மோடி,

ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் அநுரகுமார திசாநாயக்கவின் முதல் வெளிநாட்டு பயணமாக இந்தியா வந்தமைக்கு பிரதமர் மோடி தனது நன்றியைத் தெரிவித்தார், மேலும் இது இலங்கையுடனான இந்தியாவின் உறவுகளை வலுப்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

"ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை இந்தியாவிற்கு வரவேற்கிறேன். ஜனாதிபதியாக, உங்கள் முதல் அரசு முறைப் பயணத்திற்கு நீங்கள் இந்தியாவைத் தேர்ந்தெடுத்ததில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த பயணத்துடன், எங்கள் உறவுகளில் புதிய வேகமும் ஆற்றலும் உருவாக்கப்படுகின்றன. எங்கள் கூட்டாண்மைக்காக, நாங்கள் ஒரு எதிர்கால தொலைநோக்கை ஏற்றுக்கொண்டுள்ளோம்.

"எங்கள் பொருளாதார ஒத்துழைப்பில், முதலீடு சார்ந்த வளர்ச்சி மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான இணைப்பை வலியுறுத்தியுள்ளோம்," என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

இந்தியா மற்றும் இலங்கையின் பாதுகாப்பு நலன்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன என்றும், "பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை விரைவில் இறுதி செய்ய முடிவு செய்துள்ளோம்" என்றும் பிரதமர் மோடி தெரிவித்திருந்தார்.

மேலும், கொழும்பு பாதுகாப்பு மாநாடானது பிராந்திய அமைதி, பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்கான ஒரு முக்கியமான தளம் என்று நம்புவதாகவும்" பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டிருந்தார்.

கடல் பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு, சைபர் பாதுகாப்பு, கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான போராட்டம், மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணம் ஆகியவற்றை மேம்படுத்துவதில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அவர் மேலும் வலியுறுத்தினார்.

"இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான மக்களின் உறவுகள் நமது நாகரிகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன" என்று பிரதமர் மோடி மேலும் தெரிவித்தார்.

இதனையடுத்து உரையாற்றி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, "தனது இந்திய விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்த உதவும் என்று தெரிவித்தார்.

மேலும், இலங்கைக்கு விஜயம் செய்யுமாறும் பிரதமர் மோடிக்கு ஜனாதிபதி அநுரகுமார அழைப்பு விடுத்தார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டதாகவும், அந்த நிலையில் இருந்து மீள்வதற்கு இந்தியா பெரும் ஆதரவை வழங்கியதாகவும் தெரிவித்தார்.

"இந்தியாவின் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் இலங்கை நிலப்பரப்பை எந்த வகையிலும் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்று உறுதியளிப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்தியாவுடனான ஒத்துழைப்பு நிச்சயமாக செழிக்கும், மேலும் இந்தியாவிற்கான எங்கள் தொடர்ச்சியான ஆதரவை உறுதிப்படுத்த விரும்புகிறேன்," என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அழைப்பு விடுத்தார்.

# வரவு செலவு திட்ட வரம்புகளுக்கு மேல் அரசாங்கம் கடன் பெறவில்லை

(கனூஷியா புஷ்பகுமார்)

இந்த ஆண்டு வரவுசெலவு திட்ட வரம்புகளுக்கு மேல் அரசாங்கம் கடன் பெற்றுக்கொள்ளவில்லை என வெரிட்டே ரிசர்ச் என்ற பொருளாதார ஆய்வு நிறுவனம் சமீபத்திய ஆய்வில் வெளிப்படுத்தியுள்ளது. அதன்படி, அரசாங்கம் உள்ளூர் அளவில் பெற்றுக் கொள்ளும் மொத்த கடன் தொகை குறிப்பிடப்பட்டுள்ள வரம்பிற்குள் உள்ளதாக வெரிட்டே ரிசர்ச் கூறுகிறது. இவ்வாண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடுகளுக்கு அரசாங்கம் நிர்ணயித்த வரம்பு 3,670 பில்லியன் ரூபா என நிதியமைச்சின் தரவு அறிக்கை தெரிவிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஜனவரி மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரை

## வெரிட்டே ரிசர்ச் சுட்டிக்காட்டு

அரசாங்கம் எடுத்த கடன் தொகை 1,903 பில்லியன் ரூபா என்றும் மேலும், 1,766 பில்லியன் ரூபாவை அரசாங்கம் கடனாகப் பெற முடியும் எனவும் வெரிட்டே ரிசர்ச் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவித்துள்ளது.

குறித்த தரவுகளின்படி, 2024ஆம் ஆண்டில் வரம்புக்கு மேலதிகமாக கடன் பெறும் அபாயமான நிலையில் அரசாங்கம் இல்லை என வெரிட்டே ரிசர்ச் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய உயர்மட்ட தலைவர்களுடன் ஜனாதிபதி அநுர







## இலங்கை கல்வி நிருவாக சேவை

# அதிகாரிகளின் சேவை மூப்புப்பட்டியலை இற்றைப்படுத்தி வெளியிடுமாறு கோரிக்கை

(முகம்மட் முக்தார்)

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கல்வி நிருவாக சேவை முதலாம் தர அதிகாரிகளின் சேவை மூப்புப் பட்டியல் இற்றைப்படுத்தப்படாமை காரணமாக பல்வேறு குளறுபடிகள் அப்பட்டியலில் உள்ளதாக இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகள் சங்கம் கல்வி அமைச்சுச் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் மேற்படி சேவை மூப்புப் பட்டியல் 2022 நவம்பர் மாதம் வழங்கப்பட்ட பதவி உயர்வையும் சேர்த்து வெளியாகியுள்ளது.

குறித்த பட்டியலில் 416 பேரின் பெயர்ப்பட்டியல் வெளியாகியுள்ளது. இப்பட்டியலில் ஏற்கனவே ஓய்வுபெற்றுச் சென்றவர்கள், மரணமடைந்தவர்கள், விசேட தரத்திற்கு பதவி உயர்வு பெற்றோர், என சுமார் 75 பேரின் பெயர்கள் சேவை மூப்புப்பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

மேலும் சேவைமூப்புப் பட்டியலில் இடம்பெற்றுள்ள சேவை நிலையத்தில் இருந்து வேறு சேவை நிலையங்களுக்கு அதிகமான உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றபோதும் புதிய சேவை நிலையங்களும் அதில் குறிப்பிட்டு இற்றைப்படுத்தப்படவில்லை என மேற்படி சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே தற்போது வெளியிடப்பட்டுள்ள இலங்கை கல்வி நிருவாக சேவை முதலாம் தர அதிகாரிகளின் சேவை மூப்புப்பட்டியலை இற்றைப்படுத்தி புதிய சேவை மூப்பு பட்டியலை வெளியிடுமாறு கோரப்பட்டுள்ளது.

## பண்டோரா பேப்பர்ஸ் சர்ச்சை

# சர்வதேச பொலிஸாரின் உதவியை நாடுகிறது சிஐடி

(ஆர்.மனோசங்கர்)

பண்டோரா பேப்பர்ஸ் தகவல் வெளிப்படுத்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள இலங்கையரின் சொத்துக்கள் தொடர்பில் விசாரணை நடத்த சர்வதேச பொலிஸாரின் உதவியை நாடவுள்ளதாக குற்றப் புலனாய்வு பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி, தேவையான ஆவணங்களை விரைவில் கொண்டு வருவதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அதன் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமால தெரிவித்துள்ளார்.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்றிடம் கருத்து வெளியிட்ட அவர், இதனை குறிப்பிட்டுள்ளார்.

பண்டோரா அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி, பல இலங்கை அரசியல்வாதிகள் மற்றும் வர்த்தகர்களின் பெயர்கள் அதில் இடம்பெற்றுள்ளன.இந்த அறிக்கையில் உள்ள அனைத்து தகவல்களும் பெறப்பட்டு உரிய முறையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என குற்றப் புலனாய்வு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 02ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்**: இன்று குறைந்த செயலாற்றலுடன் காணப்படுவீர்கள்.

**ரிஷபம்**: இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.

**மிதுனம்**: இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும் நாள்.

**கடகம்**: தடைப்பட்டு வந்த சுபகாரியங்களை துரிதமாக முடித்துக் காட்டுவீர்கள்.

**சிம்மம்**: இன்றைய நாளை உங்களுக்கு சாதமாக்கிக் கொள்ளுங்கள்.

**கன்னி**: இன்றைய நாளை சிறப்பாக பயன்படுத்துவீர்கள்.

**துலாம்**: இன்று அசௌகரியங்கள் காணப்படும்.

**விருட்சிகம்**: இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

**தனுசு**: இன்று நீங்கள் சிறந்த வாய்ப்புகளை இழப்பீர்கள்.

**மகரம்**: இன்று உங்களுக்கு சிறப்பான நாளாக இருக்கும்.

**கும்பம்**: இன்று கடன் வகையில் பண வரவு காணப்படும்.

**மீனம்**: இன்று உங்களுக்கு குறைந்த பலன்களே கிடைக்கும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று பிற்பகல் 01:11 வரை துவிதியை பின்பு திரிதியை.

**நட்சத்திரம்:** இன்று அதிகாலை 03:17 திருவாதிரை பின்பு புனர்பூசம்.

**யோகம்:** சித்த

**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** அனுஷம்.

**சூலம்:** வடக்கு.

**இராகு காலம்:** 03:00 PM முதல் காலை 04:30 PM வரை.

**குளிகை:** 12:00 PM முதல் 01:30 PM வரை.

**எமகண்டம்:** 09:00 PM முதல் 10:30 PM வரை.

# இன்று நாடாளுமன்றம் கூடும்



(கனூஷியா புஷ்பகுமார்)

நாடாளுமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை (17) கூடுகிறது. தற்போது வெற்றிடமாக உள்ள சபாநாயகர் பதவிக்கு புதிய சபாநாயகர் இன்று தேர்வு செய்யப்படவுள்ளார். அதனைத் தொடர்ந்து வழமை போன்று நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இன்று காலை 9.30 முதல் 10.30 வரையான நேரமானது வாய்வழி பதில்களை எதிர்பார்க்கும் கேள்விகளுக்கு முன்னதாகவே ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் புதிய சபாநாயகர் தெரிவு,அமர்வின் ஆரம்பத்தின் போதே இடம்பெறவுள்ளதால் அதற்கு சிறிது நேரம் எடுக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# அநுரவைத் தொடர்ந்து ரணில் இந்தியா பயணம்

(கனூஷியா புஷ்பகுமார்)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 22ஆம் திகதி இந்தியாவிற்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இரண்டு மாத காலப்பகுதிக்குள் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்கு பயணம் மேற்கொள்ளும் இரண்டாவது தடவை இதுவாகும்.இம்முறை இந்திய பயணத்தின் போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல விசேட சந்திப்புகளில் ஈடுபடவுள்ளதாக அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தவிர, டிசம்பர் 27ஆம் திகதி முன்னாள் குடியரசுத் தலைவர் அடல் பிஹாரி வஜ்பாய் நினைவேந்தல் உரையை அவர் ஆற்றவுள்ளார்.ரணில் இம்முறை இந்திய பயணத்தின் போது ஒரு வாரத்திற்கும் அதிக நாட்கள் இந்தியாவை சுற்றிப் பார்க்கவுள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளது.இந்தியாவின் புராதன இடங்களை பார்வையிடுவதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் அதிக நேரத்தை ஒதுக்கியுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 2025ஆம் ஆண்டுக்கான பாடசாலை தவணை அட்டவனை வெளியானது

(எஸ்.டொரின்)

2025 ஆம் ஆண்டிற்கான பாடசாலை பருவ அட்டவணையை கல்வி அமைச்சு நேற்று(16) வெளியிட்டது. இதனடிப்படையில், முதலாம் பாடசாலை தவணை மூன்று கட்டங்களாக நடைபெறும் எனவும் முதல் கட்டம் ஜனவரி 27 முதல் மார்ச் 14 வரை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாடசாலை முதலாம் தவணையின் இரண்டாம் கட்டத்தை ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரையிலும் மூன்றாம் கட்டத்தை ஏப்ரல் 21 ஆம் திகதி முதல் மே 9 ஆம் திகதி வரையிலும் நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இரண்டாம் பாடசாலை தவணை மே 14 முதல் ஆகஸ்ட் 7 வரை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் பாடசாலை தவணை இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளதுடன், முதல் கட்டத் தவணை ஆகஸ்ட் 18ஆம் திகதி முதல் அக்டோபர் 17ஆம் திகதி வரையிலும் இரண்டாம் கட்டத் தவணை நவம்பர் 17ஆம் திகதி முதல் டிசம்பர் 19ஆம் திகதி வரையிலும் நடைபெறவுள்ளதாகவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# சு.கவின் தலைவர் பதவிக்கு போட்டியிடேன்

நீதிமன்றத்தை அவமதித்ததாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று(16) தீர்க்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் சரத்சந்திரவினால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ள போதிலும், மைத்திரிபால சிறிசேன அந்த பதவியில் செயற்பட்டு நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது, பிரதிவாதி மைத்திரிபால சிறிசேன சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவிக்கு தமது கட்சிக்காரர் போட்டியிட மாட்டார் என்றும் தற்போதைய தலைவர் நிமல் சிறிபாலவுக்கு எதிராகவும் போட்டியிடப் போவதில்லை என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.



அந்த உண்மைகளின் அடிப்படையில் இந்த மனுவை தீர்த்து வைக்க முடியும் என ஜனாதிபதியின் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பில் திருப்தியடைவதாகவும், அந்த உண்மைகளின் அடிப்படையில் மனுவைத் தீர்ப்பதற்கு இணங்குவதாகவும் மனுதாரரின் சட்டத்தரணி சாந்த ஜயவர்தன நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

அதன்படி, மனுவை விசாரித்த மேல்முறையீட்டு நீதிமன்ற குழாம், மனுவை வாபஸ் பெற அனுமதித்ததுடன், தள்ளுபடி செய்யவும் முடிவு செய்தது.

# காலி சிறையில் 540 கையடக்கத் தொலைபேசிகள் பறிமுதல்

காலி சிறைச்சாலையில் இவ்வருடம் இதுவரையில் 540 கையடக்கத் தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக புதிய அரசாங்கத்தின் முதலாவது காலி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் (12) காலி மாவட்ட செயலகத்தில் தொழிற்கல்வி பிரதியமைச்சர் நளின் ஹேவகே தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த தகவல் வெளிப்படுத்தப்பட்டது.



கையடக்கத் தொலைபேசிகள் கடத்தலுக்கு சிறைச்சாலை அமைந்திருந்த இடம் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளதாக காலி சிறைச்சாலையின் பிரதி பிரதான சிறைச்சாலை அதிகாரி தனுஷ்க புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

மேலும் கூட்டத்தில் பேசிய காலி மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜகத் சேரம்,

சிறைச்சாலை மதில் சுவருக்கு மேல் பாதுகாப்பு வலை மற்றும் சிசிடிவி கமராக்களை பொருத்துவதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

## ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# நிதான அரசியல் நகர்வுதான் உறவை மேலும் பலப்படுத்தும்

இந்தியாவின் தலைநகர் புதுடெல்லி சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் ஆணை பெற்ற ஜனாதிபதி ஒருவர், உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியாவுக்குச் சென்றிருப்பது, இராஜதந்திர மட்டத்தில் பெரும் வரவேற்பைப் பெற்று இருக்கிறது.

அண்டைய நாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பிரதமர் மோடியின் கொள்கைத் திட்டத்தின் கீழ், இந்தியாவின் விசேட அழைப்பை ஏற்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இந்தியா சென்றிருப்பது இருதரப்பு உறவுகளுக்கும் பெரும் பலத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கை, இறைமை உள்ள நாடு. சுயமான அரசியல் முன்னெடுப்புக்களோடும், சுய பொருளாதாரத்தோடும் தன்னை வளப்படுத்திக் கொண்டு பயணிக்கும் நாடு என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், இலங்கையில் நெருக்கடிகள் ஏற்படுகின்ற பொழுதெல்லாம், கை கொடுத்துக் காப்பாற்றும் நாடு இந்தியா என்பதை நடைமுறை ஊடாக நாம் கண்டிருக்கிறோம்.

கோட்டாபயவின் ஆட்சிக் காலத்தில், பொருளாதாரத்தில் மூச்சு விட முடியாமல் திணறிய இலங்கைக்கு, எதிர்பார்ப்புகள் எதுவும் இன்றி, உதவிக்கரம் நீட்டிய நாடு இந்தியா. அயல்நாடு என்ற ரீதியிலும், பிராந்திய வல்லரசு என்ற வகையிலும் இந்தியாவைத் தவிர்த்து, இலங்கை பொருளாதார சுபிட்சத்தை நோக்கிப் பயணிக்க முடியுமா? என்பது நம் மத்தியிலே ஏற்படுகின்ற கேள்வியாகும்.

இவைகளுக்கு அப்பால், இந்திய முதலீடுகளும், கலாசார உறவுகளும் இலங்கையையும் இந்தியாவையும் இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. நாம் விரும்பியோ விரும்பாமலோ, இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவு யதார்த்தமான அரசியலாக இருந்து வருகிறது.

இந்த நிலையில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்திய விஜயம், உலகத்தைத் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது.

அநுரகுமார திசாநாயக்கவுக்கு ஜனாதிபதி மாளிகையில் செங் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி மாளிகையில் உலகத் தலைவர்களுக்கு இதுவரை வழங்காத பிரம்மாண்ட வரவேற்பு என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்திருக்கின்றன.

மூன்று நாள் பயணமாக இந்தியாவுக்கு வந்த அநுரகுமாரவை ஞாயிற்றுக்கிழமை மாலை மத்திய இணையமைச்சர் எல்.முருகன் மற்றும் அரசு அதிகாரிகளால் வரவேற்கப்பட்டார்.

பிரதமர் நரேந்திர மோடியை நேற்று சந்தித்த அநரகுமார திசாநாயக்க இருதரப்பு பேச்சு வார்த்தைகளை நடத்தி இருக்கிறார். மீனவர்கள் பிரச்சினை, இலங்கைத் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்தும் இருவரும் பேசி இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் டெல்லி விஜயம், இராஜதந்திர உறவுகளுக்கு அப்பால், இன்னும் ஒரு வகையிலும் முக்கியத்துவம் பெறுகிறது.

அநுரகுமார திசாநாயக்க தலைமை தாங்கிய ஜேவிபி கட்சி, இந்திய எதிர்ப்பு வாதத்தோடு உருவாக்கப்பட்ட கட்சி என்பது வரலாறு. ஜேவிபி கட்சியின் ஸ்தாபகர் ரோஹண விஜேவீர, இந்திய விஸ்தரிப்பு வாதத்திற்கு எதிராகப் போராடியவர். ரஷ்யாவில் கல்வி கற்ற ரோஹண விஜேவீர, இந்தியாவுக்கு எதிராகப் பல போராட்டங்களை நடத்தியவர். அவருடைய வாரிசாக இருப்பவர் தான், தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த போது, இந்தியாவோடு செய்து கொள்ளப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்களை, இரத்துச் செய்யப் போவதாக, ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களின் போது, அநுரகுமார திசாநாயக்க, மேடைகளில் பிரசாரங்களை முன்வைத்திருந்தார்.

இந்திய எதிர்ப்பு வாத பின்னணியில், இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயம், மேலும் முக்கியத்துவம் பெறுகிறது.

என்றாலும், இந்தியாவின் பாதுகாப்பும், இந்திய முதலீடுகளுக்கு அளிக்கப்படுகின்ற உத்தரவாதமும் எந்த வகையிலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்து விடக் கூடாது என்பதில், இந்தியா மிகவும் உறுதியாக இருக்கிறது.

இருதரப்பு சந்திப்பின் பின்னர், கூட்டுச் செய்தியாளர் மாநாட்டை நடத்திய பொழுது, இரு நாடுகளின் தலைவர்களும் ஆற்றிய உரை, இதனை வெளிப்படையாகக் காட்டியது. இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில், இலங்கை செயல்படாது என்ற உத்தரவாதத்தை, இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, செய்தியாளர்களிடம் வெளிப்படுத்தினார். அதேபோல, இந்தியா இலங்கைக்குத் தொடர்ச்சியாக வழங்கி வருகின்ற, ஒத்துழைப்புகளைப் பட்டியலிட்ட பிரதமர் நரேந்திர மோடி, இப்படியான உதவிகள் மேலும் மேலும் அதிகரிக்கும் என்ற தொனியில் கூறினார்.

தேர்தல் காலங்களில் என்னதான் பேசப்பட்டாலும், இரு நாடுகளின் உறவுகள் பரஸ்பரம் கட்டி எழுப்பப்பட வேண்டும். உறவைப் பிரிக்க நினைக்கும் கழுகுகள் வட்டமிட்டுத் திரிந்தாலும், நிதானமான அரசியல் நகர்வுதான் இரு நாடுகளின் உறவை மேலும் பலப்படுத்தும்.

பாதுகாப்பு என்பது, இந்தியாவுக்கு மட்டுமல்ல, இலங்கைக்கும் முக்கியமானது. இலங்கையில் பலவீனமான அரசு ஒன்று அமையுமானால், பொருளாதாரத்துக்கு வீழ்ச்சி ஏற்படுவதோடு நாட்டின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த நிலையில், இரு நாடுகளினதும் பரஸ்பர ஒன்றுபட்ட செயல்பாடு, இந்துமா சமுத்திர கடல் வலய நாடுகளுக்கு பலத்த பாதுகாப்பாகவே அமையும். ஆகவே, இலங்கையும் இந்தியாவும் ஒன்றை ஒன்று அரவணைத்துச் செல்லும் போக்கு, ஆரோக்கியமான, பிராந்திய ஸ்த்திர நிலையை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.





# காலமும் கருத்துமாய் நிலைத்து விட்ட பேராசிரியர் யோகராசா

**இன்று பேராசிரியர் செல்லையா யோகராசவின் 75ஆவது பிறந்த தினம்**



மொழித்துறைப் பேராசிரியரும், தமிழறிஞருமான காலஞ்சென்ற செ. யோகராசா தமிழ் இலக்கியத்தில் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். கருணையோகன் என்ற புனைபெயரில் சிறுகதைகளும் கவிதைகளும் எழுதியுள்ள இவருக்கு, ஈழத்து நவீன கவிதை நூலுக்காக தேசிய சாகித்திய விருது 2007 இல் கிடைத்தது.

பேராசிரியர் யோகராசா யாழ்ப் பாணம் வடமராட்சியிலுள்ள கரண வாய் என்னும் ஊரில் பிறந்து ஆரம்பக் கல்வியை கரணவாய் வித்தியாலயத்திலும், உயர் கல்வியை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் பயின்று, பின்னர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 1971 இல் தமிழில் இளங்கலை சிறப்புப் பட்டத்தையும், 1972 இல் இளமெய்யியல் பட்டமும் பெற்றவராவார். அத்துடன், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 1984 இல் கல்வி டிப்ளோமா பட்டத்தையும், 1990 இல் முதுகலைப் பட்டத்தையும், 1999-இல் முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

1972 முதல் பல்வேறு இடங்களில் அஞ்சலக முகாமையாளராகப் பணியாற்றிய செ.யோகராசா 1976-இல் ஆசிரியப் பணியில் சேர்ந்தார். 1991 இல் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மொழியியலில் விரிவுரையாளராக இணைந்து, 2009 இல் பேராசிரியரானார். நவீன தமிழ் இலக்கியம், தமிழியல் ஆய்வு, ஈழத்து இலக்கியம், சிறுவர் இலக்கியம், பெண்கள் இலக்கியம், நாட்டாரியல், கல்வி உள்ளிட்ட துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டு பல நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில், ஈழத்துத் தமிழ் நாவல் வளமும், வளர்ச்சியும் (2007), இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண் பாத்திரங்கள், ஈழத்து நவீன கவிதை, ஈழத்து முச்சந்தி இலக்கியம், ஈழத்து இலக்கியமும் இதழியலும் (2008), பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை (2007) ஈழத்து நவீன இலக்கிய உருவாக்கத்தில் மண்டூர் பாரதியின் பங்களிப்பு (2010), நவீன இலக்கியங்கள்-படைப்பாளர்கள்-தடங்கள்" (2019) போன்ற நூல்களை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

ஈழத்து நவீன இலக்கியங்கள் - படைப்பாளர்கள் - தடங்கள் எனும் நூலில் அவரின் நாற்பதாண்டுகளின் திறனாய்வுச் செல்நெறியினைக் காணமுடியும், இது ஈழத்து நவீன இலக்கியச் செல்நெறியில் முக்கிய தடங்கள் தொடங்கி மட்டக்களப்பு வாய்மொழிப் பாடல்கள், கட்டுப்பாடல்களின் ஆக்கமும் பயில் நிலையும் ஈறாக எழுபத்தெட்டுக் கட்டுரைகளின் (முன்னுரைகளின்) தொகுப்பாகும். இதில் இவரின் இலக்கியத் திறனாய்வின் விசாலிப்பினைக் காணமுடியும்.

கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரிடம் கற்ற விமர்சனப் பாரம்பரியத்தை ஏற்றுக்கொண்டு காலமும் கருத்தும் கருதி தனக்கான புதிய இலக்கியச் செல்நெறியினை உருவாக்கிக் கொண்டார். இவரின் இலக்கியத் திறனாய்வு, இனம்,மதம், கலாசாரம், பண்பாடு கடந்த மானிடக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டது. வாதங்களில் சிக்கிக்கொள்ளாத தனித்துவத்தை உணர்த்திய திறனாய்வாளர் என செ.யோகராசாவை குறிப்பிடலாம்.

நல்லதொரு படைப்பாளிதான் சிறந்ததொரு திறனாய்வாளனாக இருக்க முடியும் என்பதற்கிணங்க "கருணை யோகன்" என்கின்ற ஆக்கவிலக்கியக் கர்த்தா, யோகராசா என்கின்ற திறனாய்வாளரானார் என அறுதியிட்டுக் கூறமுடியும். இவரின் திறனாய்வுச் சிந்தனையினை "ஈழத்து நவீன கவிதை புதிய உள்ளடக்கங்கள், புதிய தகவல்கள், புதிய தரவுகள்" (2007) என்னும் தேசிய சாகித்திய மண்டல விருது பெற்ற ஆய்வுநூலில் காணலாம்.

யோகராசாவை புரிந்துகொள்ள, அவரோடு நெருங்கியவர்களின் வாக்குமூலங்கள் சிலவற்றை நோக்குவோமாயின், பேராசிரியர் சி. மௌனகுரு குறிப்பிடுகையில், "தகவல்களே இல்லாமல் பம்மாத்துப்பண்ணும் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் தகவல்களைத் தேடித்தொகுத்துத் தந்த யோகராசா மிகப் பெரும் மதிப்புக்குரியவராகின்றார்" எனவும், மு.நித்தியானந்தன் குறிப்பிடுகையில், "எதையும் எல்லாவற்றையும் பேதமின்றி தேடிச்சேர்த்து, வாசித்துக் குறிப்பெடுத்துப் பேணும் இலக்கிய ஆவணவியலாளன். யாழ்ப்பாணம், மலையகம், மட்டக்களப்பு என்று சகல பிராந்தியங்களிலும் வாழ்ந்து அவ்வப் பிரதேச எழுத்தாளர்களுடன் அந்நியோன்யமாய்ப் பழகி நல்லுறவு கொள்ளும் பெரும் பண்பு அவருடையது. அரசியல் மனச்சாய்வுகள், இலக்கிய தாரதம்மியங்கள், தனிநபர் மோதல்கள் இவற்றுக்குள் யோகராசா அகப்பட்டுக்கொள்வதில்லை. அவற்றில் அவருக்கு ஆர்வமும் இல்லை. மெல்லிய புன்சிரிப்போடு அவற்றைக்கடந்து செல்லும் கலையை அவர் சாதுரியமாகக் கற்றுத் தேர்ந்திருக்கின்றார்" என குறிப்பிட்டுள்ளார். மேலும்,துரை.மனோகரன் குறிப்பிடுகையில், "இலக்கியத்தில் பல்துறை ஈடுபாடு கொண்ட யோகராசா, நவீன இலக்கியத்தில் அதீத ஈடுபாடு கொண்டு உழைத்து வந்துள்ளார்.

ஈழத்து நவீன இலக்கியம் தொடர்பாக யோகராசாவின் எழுத்து முயற்சிகள் விதந்து பாராட்டத்தக்கவை. அவரது ஈழத்து நவீன கவிதை, ஈழத்துத் தமிழ் நாவல் வளமும் வளர்ச்சியும் ஆகியவை ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி தொடர்பான குறிப்பிடத்தக்க நூல்களாகும். ஈழத்து இலக்கியம் தொடர்பாக அவர் எழுதிய பல கட்டுரைகளும் பல புதிய செய்திகளைத் தருவனவாயுள்ளன." என்றும் எஸ். எதிர்மன்னசிங்கம் அவர்கள் எழுதுகையில், "பேராசிரியர் அவர்கள் தன்னைக் கவனிக்காமல் இலக்கிய முயற்சிகளிலேயே கூடிய கவனம் எடுத்து நிறையவே வாசித்து நவீன இலக்கியத் துறையிலும் சரி, பழைய இலக்கியங்களிலும் சரி கூடுதலான விடயங்களைத் தெரிந்து வைத்திருப்பதால் விமர்சனத் துறையில் முன்னிலை வகிக்கின்றார்.

மட்டக்களப்பு, கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, அம்பாறை முதலான மாவட்டங்களில் நடைபெறுகின்ற நூல் வெளியீடுகள், ஆய்வரங்குகள் சகலவற்றிற்கும் ஏற்பாட்டாளர்கள் இவரை அழைப்பதைக் காணமுடிகின்றது." எனவும் நந்தினி சேவியர் "இளந்தலைமுறையே மனந் தளராதீர். இப் பேராசிரியரின் பணியினை ஓய்வின் பின்னரும் நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் 90 களில் வாசகர்களாகிய நாங்கள் இழந்த இந்தக் 'கருணையோகன்' என்ற கவிஞனை நம்மால் மீளப் பெற முடியுமா.?" என ஆதங்கப்படுகிறார்.

சுவஸ்திகா யோகராசா தொகுத்து வெளியிட்ட"கருணையோகன் கவிதைகள்" தொகுப்பில் 'பெண்மையைப் போற்றுகிறோம்' தொடங்கி 'வசித்தல் உயர்மலை வாழ்வோ தாழ் நிலை' வரையில் முப்பத்துமூன்று கவிதைகள் உள்ளன. இக்கவிதைகளினூடே அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களின் மீதான இவரின் அதிருப்தியை அவலம் நகைச்சுவை உணர்வுடன் வெளிப்படுவதுபோல் காணப்படினும் அதற்குள் ஆத்திரம் வெளிப்படுவதனையும் காணலாம்.

நிறைவாக, பேராசிரியர் செ.யோகராசாவின் ஆய்வுகளினூடு, அவரை ஒரு தனித்துவமான திறனாய்வாளராகவும் இலக்கிய மாணவர்களுக்கு அவர் ஒரு நூலகமாகவும் இறுதிவரை இருந்தார் என்பதனையும் கூறியாக வேண்டும்.

**சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன்**
முகாமையாளர்,
ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம்,
புளியங்குளம்.



# காவோலைக்கு மேல் கற்கள் போடப்பட்ட காபட் வீதி





**பு.கஜிந்தன்**

மீசாலை அல்லாரை பிரதான வீதி புனரமைக்கும் பணிகளில் வீதியின் குறிப்பிட்ட சில இடங்களில் ஒரு அடி ஆழமான நீளமான குழிகள் தோண்டப்பட்டு அதற்குள் காவேலைகள் போடப்பட்டு அதற்கு மேலாகக் கற்கள் போடப்பட்டு வீதி புனரமைப்பது பொதுமக்களிடையே ஆச்சரியத்தையும் விமர்சனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட மீசாலை – அல்லாரை பிரதான வீதியே புனரமைக்கப்படும் வீதியாகும்.

இது தொடர்பாக வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினர் உடனடியாக உரிய நடவடிக்கை எடுப்பதோடு அதற்கான விளக்கத்தையும் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மீனவர் பிரச்சினைகளை அறிந்து கொள்ளாமல் இந்தியா சென்ற ஜனாதிபதி

**பு.கஜிந்தன்**



இந்தியா சென்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா மீனவர்கள் பிரச்சினைகள் தொடர்பில் மீனவ பிரதிநிதிகளுடன் பேசி எமது பிரச்சினைகளை அறிந்துகொண்டு செல்லவில்லை என்று வடமாகாண மீனவ பிரதிநிதி நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வல்வெட்டித்துறையில் உள்ள தனது இல்லத்தில் நடாத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்தோடு மீனவர்கள் பல் வேறு வகையிலும் பாதிக்கப்படுவ தாகவும் தெரிவித் தார்.

இதேவேளைப் புதிதாகப் பொறுப் பேற்ற கடற்றொழில் அமைச்சர் மீனவர் பிரச்சினையை வெறுமனே பார்வையிட்டுச் செல்வதாகவும் தெரிவித்தார்.

# அர்ச்சுனா எம்.பிக்கு பிணை



**பு.கஜிந்தன்**

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவும், கௌசல்யாவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள், கடந்த 09.12.2024 அன்று அத்துமீறி உள் நுழைந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா சட்டத்தரணி கௌசல்யா ஆகிய இருவரையும் பிணையில் செல்ல யாழ்ப்பாணம் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கலாநிதி த.சத்தியமூர்த்தியால் வழக்கு தாக்கு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# பல்பொருள் விற்பனை நிலையங்களில் திருட்டு

### அறியத்தருமாறு பொலிஸார் கோரிக்கை

**பு.கஜிந்தன்**

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, சுன்னாகம் பகுதிகளை அண்மித்துள்ள பல்பொருள் விற்பனை நிலையங்களில் திருட்டுக்களில் ஈடுபடும் குழுக்கள் தொடர்பான தகவல் கிடைத்தால் அறியத் தருமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல்பொருள் விற்பனை நிலைய உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொலிஸார் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் சுன்னாகம் பகுதியில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றுக்குள் நுழைந்து, அங்குப் பொருட்களை வாங்குவது போலப் பாசாங்கு செய்து பல பொருட்களைத் திருடி, தமது ஆடைகளுக்குள் மறைத்து எடுத்து செல்வது அங்குள்ள பாதுகாப்பு கண்காணிப்பு கமராக்களில் பதிவாகியுள்ளது. இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இக் குழு தொடர்ச்சியாக இவ்வாறான திருட்டுக்களில் ஈடுபட்டு வருவதனால், அவர்கள் தொடர்பான தகவல்கள் அறிந்தால், அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு அறிவிக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

# வடமாகாண உலக சுற்றுலா தின நிகழ்வு



**பு.கஜிந்தன்**

வடமாகாண சுற்றுலா பணியகம் மற்றும் வடமாகாண அமைச்சின் எற்பாட்டில், "சுற்றுலாவினை மேம்படுத்தி எதிர்காலத்தில் மாற்றத்தினை உருவாக்குவோம்" என்னும் தொனிப் பொருளில் உலக சுற்றுலா தினமும் கலை கலாசார வாகன ஊர்தி நடைபயண நிகழ்வும் நேற்று முன்தினம் (15) மாலை யாழ்ப்பாணம் பொது நூலக முன்றலில் ஆரம்பமாகின.

நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக வடமாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இவ் வாகன ஊர்தி நடைப் பயணம் யாழ்ப்பாணம் பொது நூலக முன்றலில் ஆரம்பமாகி அங்கியிருந்து, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வீதி, கே.கே.எஸ் வீதி ஊடாக சென்று யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்ட பகுதியில் இனிதே நிறை வடைந்தது.

# ஐந்து வருடங்களுக்குப் பின் மன்னாரில் மறைக்கல்வி பரீட்சை

**வாஸ் கூஞ்ஞ**

மன்னார் மறை மாவட்டத்தில் மாணவர்களுக்கான வருடாந்த மறைக்கல்வி பரீட்சை ஐந்து வருடங்களின் பின் இவ்வருடம் நடைபெற்றது.



மன்னார் மறை மாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தினால் வருடந்தோறும் மன்னார் மற்றும் வவுனியா நிர்வாக மாவட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ள மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி மாணவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை (15) காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை மன்னார் மறைமாவட்டத்திலுள்ள ஐம்பது பங்குகளிலும் இப்பரீட்சை இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி நடு நிலையத்தின் இயக்குநர் அருட்பணி அந்தோனி மரியதாசன் குரூஸ் (றொக்சன்) அடிகளாரின் தலைமையில் இப் பரீட்சை நடைபெற்றது

இப்பரீட்சையானது கடந்த காலங்களில் வருடந் தோறும் வருட இறுதியில் நடைபெற்று வந்தபோதும் கொரோனா தொற்று நோய், காகிதத்தால் தட்டுப்பாடு போன்ற சூழ்நிலை காரணமாக 2019ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த ஐந்து வருடங்கள் இப்பரீட்சை நடைபெறவில்லை.

மன்னார் மறைமாவட்டத்தில் 13,187 மாணவர்கள் இப்பரீட்சையில் தோற்றியுள்ளனர்.

# இலவச யோகக்கலைக் கற்கை நெறி

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடாத்தப்பட்டு வருகின்ற யோகக்கலைக் கற்கை நெறி நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற் கரசி வித்தியாலயத்தில் நடைபெற்று வருகிறது.

சனி, ஞாயிறு தினங்களிலும், அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் காலை – 8 மணி வரை நடைபெறும் இவ் வகுப்புக்களில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றிக் கலந்து கொள்ள முடியும். மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கைநெறியைப் பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக் கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளன.

பயிலவிரும்புவோர் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறியலாம் என கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

# சர்வதேச மனக் கணிதப் போட்டி

## திருநெல்வேலி மாணவர்கள் சாதனை





2024ஆம் ஆண்டு சர்வதேச மனக் கணிதப் போட்டியில் திருநெல்வேலி யுசிமாஸ் நிலைய மாணவர் அணி சாதனைப் படைத்துள்ளது.

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் சர்வதேச மனக் கணிதப் போட்டி (14) நேற்று முன்தினம் நடைபெற்றது. இப் போட்டியில் உலகளாவிய ரீதியில் 30 இற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 6,000 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இதில், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 103 மாணவர்கள் சென்றிருந்ததோடு, திருநெல்வேலி யுசிமாஸ் நிலையத்திலிருந்து 27 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். திருநெல்வேலி யுசிமாஸ் அணியைச் சேர்ந்த அத்விதா சிந்துஜன் (7 வயது),

திருவரன் கேஷிகன் (8 வயது), சுதர்சன் ஹரிப்பிரசாத் (10 வயது) ஆகிய 3 மாணவர்கள் சம்பியன் வெற்றிக் கிண்ணங்களையும், அச்சுதா மதிவதனன்

(9 வயது)கேனுஜா மோகனகுமார் (8 வயது) ஆகிய 2 மாணவர்கள் முதலாம் இடத்தையும்

விதுஷியா மதிவதனன்(8 வயது), பிரணவன் யதுஷ் (9 வயது), ஷ காணி கேதீசன் (7 வயது),

வினோஷ்கா பிரசன்னா (10 வயது),அஷ்வினி அனோஜன் (9 வயது), சிவகாரன் குருப்பிரசாத் (6 வயது) ஆகிய 6 மாணவர்கள் இரண்டாம் இடத்தையும், சயந்தன் தரணிகன், சத்யகி இளங்குமரன், சாஹித்யா கபிலன், மதுரந்தி சதீஸ்வரன், ஐதிகா சதீஸ்வரன், அஷ்மிதா ரகுரட்ணம்,

அமுதகரன் அபினாஷ், தேவசிறீ காந்தரூபன், கபிலன் சாஜித், கருணியா சபேசன், தனதீபன் அக்க்ஷயன், அஷ்விதா இந்திரகாசன், அபிஷா கோகிலராஜ்,

ஆஹானியா ரோஹித், ஜெயக்குமார் ஹிருஷிகன், சசிகரன் அனிஷ் ஆகிய 16 மாணவர்கள் சர்வதேச ரீதியாக மூன்றாம் இடத்தையும் தனதாக்கிக் கொண்டனர்.

இம்முறை சிறப்பாக முதல் தடவையாகத் திருநெல்வேலி யுசிமாஸ் நிலையத்திலிருந்து யுசிமாஸ் உலகக் கிண்ணப் போட்டியில் பங்கு பற்றி அச்சுதா மதிவதனன், சயந்தன் தரணிகன்

வெண்கல கிண்ணத்தை வென்று சாதனை படைத்துள்ளனர்.

பயிற்றுவிப்பாளர்களின் மாதக்கணக்கான அர்ப்பணிப்பும், பல வருட அனுபவமுமே இந்த இளையவர்களின் வெற்றிக்கு வழிவகுத்துள்ளது.

யுசிமாஸ் திருநெல்வேலிக் கிளையின் 20 வருடச் சாதனைப் பயணம், புத்தாக்கம் மிக்க மாண–வர்களை உருவாக்குவதில் பெரும் வெற்றி கண்டிருப்பதனை சர்வதேச போட்டி முடிவுகள் நிரூபித்துள்ளன.

# வவுனியாவில் பப்பாசிப் செய்கை பாதிப்பு

## நேரில் பார்வையிட்டார் ரவிகரன் எம்.பி

**கி.வசந்தன்**

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 21கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 500 விவசாயிகளின் பப்பாசிப் பயிர்ச் செய்கைகள் கன மழை காரணமாக முழுமையாகவும், பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.




இந் நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைவாக, பாதிக்கப்பட்ட சில பப்பாசித் தோட்டங்களை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன், விவசாயிகளுக்குரிய நட்ட ஈடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரியதரப்பினர்களுடன் பேசுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட, 21கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த, 500 விவசாயிகளுக்கு, பசுமை அக்ரோ பிறைவேட் லிமிட்டட் என்னும் நிறுவனத்தினால் விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தினூடாக ஒரு விவசாயிக்கு அரை ஏக்கர் வீதம், மொத்தம் 250 ஏக்கரில் பப்பாசி, மிளகாய் பயிற்செய்கை மேற்கொள்வதற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் விவசாயிகளின் பாரிய நிதிச் செலவில் செய்கை பண்ணப்பட்ட பப்பாசிப் பயிர்ச் செய்கைகள் அண்மையில் பெய்த கனமழையினால், சில தோட்டங்கள் முழுமையாகவும், சில தோட்டங்கள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக பப்பாசிச் செய்கைகள் அறுவடைக்குத் தயாரான நிலையிலேயே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், நயினாமடு, மதியாமடு, சன்னாசிபரந்தன் உள்ளிட்ட கிராமங்களில் பாதிக்கப்பட்ட பப்பாசிப பயிர்ச் செய்கைகளைப் பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் பாதிப்பு நிலைமைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

உரிய தரப்பினருடன் பேசி பாதிக்கப்பட்டுள்ள பப்பாசிச் செய்கையாளர்களுக்குரிய நட்டஈடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.



# டியாகோ கார்சியா: இரகசிய இராணுவத் தீவில் சிக்கித் தவித்த இலங்கைத் தமிழர்கள்

## குடும்பமொன்று குழந்தைகளுடன் உயிர் பிழைத்த கதை!

“டியாகோ கார்சியா” – இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள சாகோஸ் தீவுக்கூட்டத்தின் தொலைதூரப் பவளத் தீவு. இது பிரிட்டனின் ஆளுகைக்கு உட்பட்ட ஒரு தீவு. பிரிட்டன் – அமெரிக்க இராணுவத்தின் இரகசிய தளம் இந்த தீவில் அமைந்துள்ளது.

இங்கு ஒரு தற்காலிக முகாமில் சாந்தி மற்றும் அவரது குடும்பத்தினர் தங்க வைக்கப்பட்டிருந்தனர். ஒரு காலை வேளையில் சாந்தியின் கணவர், தங்கள் பிள்ளைகள் பாதுகாப்பு வேலியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்ததை கவனித்தார். அங்கு ரோந்துப் பணியில் அதிகாரி ஒருவர் ஈடுபட்டிருந்தார், கூடவே காவல் நாய் ஒன்றும் இருந்தது.

அந்த குழந்தைகள் வெறித்து பார்த்துக் கொண்டிருந்தது அந்த காட்சியை தான். “நாய்களுக்குக் கூட நம்மை விட அதிக சுதந்திரம் உள்ளது” என்று அவர்கள் தந்தையிடம் கூறினர்.

“அவர்கள் சொன்னது என்னை மனதளவில் கடுமையாக பாதித்தது. நான் மனம் உடைந்துபோனேன்” என்று அவர் விவரித்தார்.

இது அவர்களின் குடும்பம் இக்கட்டான சூழலில் இருந்ததை பிரதிபலிக்கிறது. அவர்கள் தற்செயலாக ஒரு மர்மமான இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிக்குள் சிக்கிக் கொண்டனர். அவர்களுக்கு 5 வயதில் மகனும், ஒன்பது வயதுடைய ஒரு மகளும் இருந்தனர்.

### இலங்கையில் இருந்து தப்பிக்க முயற்சி

சாந்தியின் *(அவரது உண்மையான பெயர் அல்ல)* குடும்பத்தினர் தங்க வைக்கப்பட்டுள்ள அந்த சிறிய முகாமில் தொடர்ச்சியான கண்காணிப்பில் இருந்த போதிலும், தங்களால் முடிந்த அளவுக்கு இயல்பாக இருக்க முயன்றனர். குடும்பமாக மகிழ்ந்திருப்பதிலும், படிப்பதிலும், செடிகளை வளர்ப்பதிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். இரகசிய இராணுவ தீவான டியாகோ கார்சியாவில் தனது குழந்தைகளுக்கு இயல்பான உணர்வை உருவாக்க சாந்தி தன்னால் முடிந்தவரை முயற்சி செய்தார்.

சாந்தி பிற இலங்கை தமிழர்களுடன் சேர்ந்து 12,000 கி.மீ. தொலைவில் இருக்கும் கனடாவுக்கு செல்ல ஆசைப்பட்டு, ஒரு சட்டவிரோத முகவரிடம் தன் மொத்த சேமிப்புப் பணத்தையும், தனது தங்க நகைகள் அனைத்தையும் வழங்கியதாக கூறுகிறார்.

கடந்த 2009இல் முடிவுக்கு வந்த உள்நாட்டுப் போரில் தோற்கடிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் உடனான தொடர்புகள் காரணமாக, துன்புறுத்தல் செய்யப்படுவோம் என்ற அச்சத்தில், அவர்கள் அனைவரும் இலங்கையில் இருந்து தப்பிக்க நினைத்ததாகக் கூறினர்.

### மோசமான சூழலிலும் குழந்தைகளுக்கு கல்வி

அவர்கள் சென்ற மீன்பிடி படகு நடுக்கடலில் சேதமடைந்தது. அதன் விளைவாக, இங்கிலாந்தின் ரோயல் கடற்படை அவர்களைக் காப்பாற்ற நேர்ந்தது. கடற்படை அவர்களை அக்டோபர் 2021இல் டியாகோ கார்சியாவுக்கு அழைத்துச் சென்றனர். மேலும், அவர்கள் வேலியிடப்பட்ட புலம்பெயர்ந்தோர் முகாமில் தங்க வைக்கப்பட்டனர்.

அந்த முகாமிற்கு அழைத்து வரப்பட்ட போது, “கனடா வந்துவிட்டோமோ என்று மகன் கேட்டது” சாந்திக்கு நினைவுக்கு வந்தது.

டியாகோ கார்சியா தீவை அடைந்த முதல் ஆறு மாதங்கள், அவரது பிள்ளைகள் தீவில் முறையான கல்வியைப் பெறவில்லை. எனவே, பயிற்சி பெற்ற ஆசிரியையான சாந்தி, அந்த முகாமில் உள்ள குழந்தைகளுக்கு ஆங்கிலப் பாடங்களைக் கற்று கொடுக்கத் தொடங்கினார். இதன்மூலம் அவரின் பிள்ளைகளும் பயனடைந்தனர்.

“ஆங்கில எழுத்துக்கள், பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள் என அடிப்படையான பாடங்களுடன் நாங்கள் கற்பிக்கத் தொடங்கினோம்” என்று அவர் கூறுகிறார்.

அதன் பின்னர், சாந்தியின் கணவர் அந்த கூடாரத்தில் வீட்டுப்பாடம் செய்ய ஏதுவாக, மரத்தாலான பலகைகளை வைத்து மேசையை உருவாக்கினார்.

கல்வி கற்க ஒரு சிறிய பாதை உருவானப் போதிலும், மாலை நேரங்களில் குழந்தைகள் சலிப்பை உணரத் தொடங்கினர். எனவே, இந்திய பாரம்பரிய நடனமான பரதநாட்டியத்தில் பயிற்சி பெற்ற சாந்தி, நடனப் பாடங்களையும் கற்றுக் கொடுக்கத் தொடங்கினார். மேலும், அவரது தொலைபேசியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பாடல்களை வைத்து நடன அசைவுகளை சொல்லிக் கொடுத்தார்.

இந்த குடும்பம் முகாமுக்கு வந்து மூன்று ஆண்டுகள் ஆன நிலையில், அவர்கள் இறுதியாக கடந்த இரு வாரங்களுக்கு முன் பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களின் நலன்களுக்காக அரசாங்கம் இதை “விதிவிலக்கானது” என விவரித்து, அவர்களை அனுப்பியது.

“அந்த முகாம் ஒரு திறந்தவெளி சிறை போன்றது. நாங்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை. நாங்கள் வேலியிடப்பட்ட ஒரு கூடாரத்தில் வாழ்ந்தோம்” என்கிறார் சாந்தி. 30 வயதுகளின் முற்பகுதியில் உள்ள பெண்ணான அவர், லண்டனில் இருந்த போது அளித்த பேட்டியில் இதனை கூறினார்.

“ஒவ்வொரு நாளும் எங்கள் வாழ்க்கை ஒரே மாதிரியாக இருந்தது. ஒரு கூண்டுக்குள் வாழ்வது போல் இருந்தது” என்று அவர் மேலும் கூறுகிறார்.

பாதுகாவலர்கள் கண்காணித்துக் கொண்டே இருப்பார்கள். இராணுவ ஜெட் விமானங்கள் அவ்வப்போது தலைக்கு மேல் கர்ஜிக்கும். இதனையடுத்து, சாந்தியும் மற்ற இலங்கை தமிழர்களும் தீவில் உள்ள பிரிட்டிஷ் படைகளை அணுகி, பாதுகாப்பான நாட்டிற்கு அனுப்புமாறு கடிதம் கொடுத்ததாக சாந்தி கூறுகிறார். இந்தப் பிராந்தியத்தில் புகலிடம் கோரி கடிதம் கொடுப்பது இதுவே முதல் முறை. இது பிரிட்டனில் 6,000 மைல்களுக்கு அப்பால் ஒரு நீண்ட சட்டப் போராட்டத்துக்கு வழிவகுத்தது. சட்ட நடவடிக்கைகள் ஒருபுறம் நடக்க, சாந்தியும் மற்றவர்களும் அந்த தீவில் தங்களுக்கான தேவைகளை அவர்களே பூர்த்தி செய்யத் தொடங்கினர்.

முகாமில் இருந்த தமிழர்கள் அவர்களுக்கான உணவை சமைக்க அனுமதிக்கப்படவில்லை. எனவே, அவர்கள் சில காய்கறிகளை விளைவிக்கத் தொடங்கினர். அங்கு, தென்னை மரங்கள் நிறைந்திருந்தன. அதிலிருந்து கிடைக்கும் தேங்காய் நாரை பயன்படுத்தி, சாந்தியும் மற்றவர்களும் மிளகாய், பூண்டு மற்றும் வெள்ளரி போன்ற காய்கறிகளை பயிரிட்டனர்.

### முகாமில் விவசாயம் செய்தது எப்படி?

முகாமில் மிளகாய் விதைகளும் வெள்ளரி விதைகளும் எப்படி கிடைத்தது என்பதை விவரித்த சாந்தி, “அவர்கள் சில சமயங்களில் சிவப்பு மிளகாயைக் கொடுப்பார்கள். நாங்கள் அவற்றை வெயிலில் காயவைத்து விதைகளைச் சேகரித்து பயிரிட்டோம்.” என்றார்.

மேலும், “எங்களுக்குக் கொடுக்கப்படும் சாலட்டில் சில சமயங்களில் வெள்ளரித் துண்டுகள் இருக்கும். அவற்றில் இருந்து விதைகளை சேகரித்து சூரிய ஒளியில் வைத்தோம். அவை காய்ந்த பிறகு விதைத்துப் பயிரிட்டோம்” என்றார்.

அவர்கள் ஒவ்வொரு நாளும், தேங்காய் மற்றும் மிளகாயை பிசைந்து “சம்பல்” என்னும் இலங்கையின் பிரபலமான உணவை தயாரித்தனர்.

முகாமில் தங்களுக்கு வழங்கப்படும் அமெரிக்க உணவை சாப்பிட சாந்தி உள்ளிட்டோர் சிரமப்பட்டனர். மேலும், காய்கறிகளை பூண்டு மற்றும் மிளகாயுடன் வெந்நீரில் போட்டு குழம்பாக சமைக்க முயற்சித்தனர்.

முகாமில் இருந்த காவலர்களுடன் தமிழர்களுக்கு அடிக்கடி பதற்றமான சூழல் ஏற்பட்டது. ஆனாலும், “நல்ல உள்ளம் கொண்ட அதிகாரி எங்களுக்கு பிரியாணி கொண்டு வந்தார். மற்றொரு சந்தர்ப்பத்தில், ஒரு காவலர் ஆவலாக தன் பிறந்தநாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த என் மகனின் பிறந்தநாளுக்கு கேக் கொண்டு வந்தார்” என்கிறார் சாந்தி.

### எலிக்கடி தொல்லை

“என்னதான் எங்களின் தேவைகளை நாங்களே பூர்த்தி செய்து கொண்டாலும், நாட்கள் செல்ல செல்ல, உதவியற்று நிற்பது போன்ற உணர்வுகள் அதிகரித்தன” என்கிறார் சாந்தி.

“முகாமில் வாழ்க்கை கூண்டுக்குள் இருப்பது போல இருந்தது. யுக்ரேன் மற்றும் மத்திய கிழக்கில் வெடித்த பெரும் போர்கள் பற்றிய செய்திகள் முகாம் காவலர்கள் வாயிலாக எங்களுக்கு தெரிய வந்தது.”

சாகோஸ் தீவுக்கூட்டத்தின் ஒரு பகுதியான இந்த தீவுக்கான அணுகல் பெரிதும் தடைசெய்யப்பட்டுள்ளது. 1970களின் முற்பகுதியில் இருந்து பிரிட்டன் அங்கு வசிக்கும் அனைத்து மக்களையும் வெளியேற்றியது முதல், இது அதிகாரப்பூர்வமாக குடியிருப்பு மக்கள்தொகையைக் கொண்டிருக்கவில்லை. இதன்மூலம், அங்கு இராணுவத் தளத்தை உருவாக்க முடியும் என்பதே இதன் நோக்கம்.

“முதல் நாள் முதல் நாங்கள் அங்கிருந்து புறப்பட்ட நாள் வரை, ஒவ்வொரு நாளும் நாங்கள் எலிகளுடன் வாழ்ந்தோம்,” என்கிறார் சாந்தி.

“சில நேரங்களில் எலிகள் எங்களின் குழந்தைகளின் கால், கை விரல்களை கடிக்கும். அவை, எங்களின் உணவை உட்கொண்டன. இரவில் சில நேரங்களில் அவை எங்கள் போர்வைகள் மற்றும் தலையின் மீது ஊர்ந்து செல்லும்.” என்று விவரித்தார்.

“இராட்சத தேங்காய் நண்டுகள் மற்றும் வெப்பமண்டல எறும்புகள் கூட முகாமுக்குள் ஊர்ந்து செல்லும். புயல் போன்ற இயற்கை சீற்றங்களின் போது, தார்பாயால் போடப்பட்ட கூடாரங்களின் துளைகள் வழியாக மழை நீர் உள்ளே வரும். மேலும், இந்த கூடாரங்கள் இதற்கு முன்னர் தொற்றுநோய் சூழலின்போது கோவிட் நோயாளிகளுக்குப் பயன்படுத்தப்பட்டது.” என்றார்.

கடந்த ஆண்டு இறுதியில் ஐக்கிய நாடுகளின் புலனாய்வாளர்கள் முகாமுக்குச் சென்றபோது, குழந்தைகள் அவர்களிடம் “சுற்றுலா செல்வது, சைக்கிள் ஓட்டுவது, ஐஸ்கிரீம் சாப்பிடுவது” போன்ற கனவுகள் இருப்பதாகக் கூறினார்கள்.

இந்த ஆண்டின் முற்பகுதியில், ஒரு மருத்துவ அதிகாரி இங்கு பெருமளவிலான தற்கொலை முயற்சி சம்பவங்கள் நடந்ததை குறிப்பிட்டு, இந்த முகாம் “முழுமையாக நெருக்கடியில்” இருப்பதாக விவரித்தார். என் மகள் நடந்த அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தாள், அவள் என்னிடம் “அம்மா அவர்கள் தங்களைத் தாங்களே வெட்டிக் கொண்டார்கள்” என்றாள்.

நானும் அப்படி செய்து கொள்ள வேண்டுமா? என்று கேட்டாள். “இல்லை, இல்லை. அப்படி செய்யக் கூடாது என்று நான் புரிய வைத்தேன். அவளின் கவனத்தை மாற்ற பேப்பர் எடுத்து ஓவியம் வரைய சொன்னேன்” என்று அந்த சம்பவத்தைக் கண்ணீருடன் நினைவு கூர்ந்தார் சாந்தி.

இரண்டு முறை தங்கள் மகள் தன்னைத்தானே காயப்படுத்திக் கொண்டதைப் பற்றி சாந்தியும் அவரின் கணவரும் நினைவு கூர்ந்து கண்கலங்கினர்.

“என் மகள் இரண்டு முறை தன்னை தானே காயப்படுத்திக் கொண்டாள். அது மிகவும் மோசமான தருணம். ஏன் இப்படி செய்தாய் என்று என் மகளிடம் கேட்டதற்கு, தான் இப்படி செய்தால், அவளின் சகோதரன் பாதுகாப்பான மூன்றாம் நாட்டிற்குச் செல்வார் என்ற நம்பிக்கையில் இதைச் செய்ததாகச் சொன்னாள்” என்று சாந்தி கூறுகிறார்.

### உயிர் பிழைத்ததே பெரிய விஷயம்

முகாமில் இருக்கும் பிற புலம்பெயர்ந்தோரால் தங்களுக்கு பாலியல் வன்கொடுமை மற்றும் துன்புறுத்தல் நடப்பதாக குற்றச்சாட்டுகள் உள்ளன. குழந்தைகளும் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர்.

“மூன்று வருடங்களாக நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டோம். உயிர் பிழைத்ததே பெரிய விஷயம்” என்கிறார் சாந்தி.

தீவில் தமிழர்கள் வாழ்ந்த காலம் முழுவதும், பிரித்தானிய அதிகாரிகள் அது அவர்களுக்கு ஏற்ற இடம் அல்ல என்பதை ஒப்புக்கொண்டதுடன், நீண்டகாலத் தீர்வுகளைத் தேடுவதாகவும் கூறினர். அங்கிருந்த மக்களின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அரசாங்கம் கூறியது.

“அவர்கள் பிரிட்டனுக்கு அழைத்து வரப்படுவார்கள் என்றும், அங்கு ஆறு மாதங்கள் தங்குவதற்கு அவர்களுக்கு உரிமை வழங்கப்படும் என்றும் அதிகாரிகள் அறிவித்தபோது எங்களுக்கு நிம்மதியாக இருந்தது. எங்களின் மிகவும் மகிழ்ச்சியான தருணம் அது” என்கிறார் சாந்தி. மகிழ்ச்சியில் அன்று இரவு முகாமில் யாரும் தூங்கவில்லை என்றும் கூறினார்.

“பிரிட்டனுக்கு வந்தவுடன், குளிர்ச்சியான சூழல் எங்களை உற்சாகப்படுத்தியது. இத்தனை நாள் கோமாவில் இருந்துவிட்டு, எழுந்தது போல் உணர்ந்தேன். மொபைல் ஆப்ஸ்-ஐ பதிவிறக்குவது, வாட்ஸ்அப் செய்திகளை அனுப்புவது, கடைகளில் பணம் செலுத்துவது எப்படி என்பதை முழுமையாக மறந்துவிட்டேன்” என்கிறார்.

சாந்தியின் குழந்தைகள் பள்ளியைத் தொடங்குவது, நண்பர்களை உருவாக்குவது மற்றும் இரட்டை அடுக்கு பேருந்தில் செல்வது பற்றி பேசி கொண்டிருப்பதாகக் கூறுகிறார்.

ஆனால், குடும்பத்தின் எதிர்காலம் நிச்சயமற்றதாகவே உள்ளது. அவர்கள் எஞ்சியிருக்கும் நம்பிக்கையில் இப்போது பிரிட்டனில் புகலிடம் கோரியுள்ளனர். கோரிக்கை ஏற்கப்படவில்லை எனில், அவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கையாக, சாகோஸ் தீவுகளை மொரீஷியஸிடம் ஒப்படைக்க பிரிட்டன் இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒப்புக்கொண்டது.

இன்னும் கையொப்பமிடப்பட வேண்டிய இந்த ஒப்பந்தத்தின் கீழ், டியாகோ கார்சியா பிரிட்டன் – அமெரிக்க இராணுவத் தளமாகத் தொடர்ந்து செயல்படும், ஆனால் எதிர்காலத்தில் குடியேறுபவர்களின் வருகைக்கு மொரீஷியஸ் பொறுப்பேற்க வேண்டும்.

சாந்தி, டியாகோ கார்சியாவிலிருந்து ஒரு சிப்பியை கொண்டு வந்தார். அங்கிருந்ததன் நினைவாக, அதை தன் செயினில் போட்டு கழுத்தில் அணியப் போவதாகக் கூறுகிறார்.

**நன்றி - பிபிசி**








# பாலகிருஷ்ணனுக்கு கலாபூஷணம் விருது



புத்தளம் மாவட்டம் உடப்பைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர் இரா. பாலகிருஷ்ணனுக்கு தேசிய விருதான கலாபூஷணம் (2023) விருது அலரி மாளிகையில் வைத்து வழங்கப்பட்டது.

உடப்பை பிறப்பிடமாகவும், ஆண்டிமுனையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் ஒரு மீனவக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றவர்.

ஆரம்பத்தில் நாவற்காடு தமிழ் வித்தியாலயத்தில் தமது ஆசிரியர் பொறுப்பை ஏற்றதோடு, பின்னர் ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகவும், சிலாபம் சென்ட் பேனட் கத்தோலிக்கப் பாடசாலையில் ஆசிரியராகவும், குசலை தமிழ் வித்தியாலயத்தில் அதிபராகவும் இறுதியில் உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபராகவும் இருந்தார்.

## அரசாங்கம் எந்தவொரு

# வரிச்சுமையையும் குறைக்கவில்லை



நாட்டின் நடுத்தர வர்க்கத்தினரும், தொழில் வல்லுனர்களும் வரிச்சுமையைக் குறைக்க மக்கள் ஆணையை வழங்கினர். ஆனால் தற்போதைய அரசாங்கம் இதுவரை எந்த வரிச்சுமையையும் குறைக்கவில்லையென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக் கூட்டமொன்று அண்மையில் நியோமல் பெரேரா தலைமையில் பமுனுகம பிரதேசத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

தற்போதைய ஆட்சியாளர்கள் சொன்னதையும், செய்வதையும் பார்க்கும் போது, சொன்னதற்கும், செய்வதற்கும் இடையே பெரிய இடைவெளி காணப்படுகிறது. நாட்டில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் போது வழங்கப்படும் நிவாரணங்கள் போதுமானதாக இல்லை என்று தற்போதைய ஆட்சியாளர்கள் இதற்கு ஆட்சியில் இல்லாத காலத்தில் தெரிவித்தனர். குறைந்தது ஒரு இலட்சமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தாலும், சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக வழங்கப்பட்ட நிவாரணத் தொகை ரூ.40,000 ஆகவே அமைந்திருந்தது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மின்கட்டணம் 33% குறைக்கப்படும் என்று கூறப்பட்டும், அதையும் நிறைவேற்ற இவர்களால் முடியவில்லை. இன்னும் 6 மாதங்களுக்கு மின் கட்டணத்தை திருத்துவது தொடர்பில் பேசவே முடியாது என்று அரசாங்கம் தற்போது கருத்துக்களை முன்வைத்து வருகிறது. மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வரும் போது பொய்யால் ஆட்சி செய்யும் இந்த அரசாங்கத்தின் உண்மை நிலை மக்கள் மத்தியில் தற்போது வெளிப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பொருட்களின் விலையை குறைப்போம், வாழ்க்கைச் சுமையைக் குறைப்போம் என்று தேர்தல் மேடைகளில் பிரஸ்தாபித்தாலும், இன்று தேங்காய் தட்டுப்பாடும் அரிசி தட்டுப்பாடும் நிலவி வருகின்றன. வெளிநாட்டில் இருந்து அரிசி இறக்குமதி செய்ய மாட்டோம் என்று கூறிய இவர்கள், இன்று வெளிநாட்டிலிருந்து கூட அரிசியை இறக்குமதி செய்து வருகின்றனர். அரிசி தட்டுப்பாடுக்கும், தேங்காய் தட்டுப்பாடுக்கும் தேசிய ரீதியில் தீர்வு இல்லை. இவற்றை நாம் புத்திசாலித்தனமாக சிந்திக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# ஹபரணயில் சுற்றுலா சேவை மையம் திறப்பு

**(எம்.ரீ.ஆரிப்)**

கொரியா நாட்டுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் ஒத்துழைப்பின் அடையாளமாக சுற்றுலா சேவை மையம் கொரியா அரசாங்கத்தினால் சமூக அடிப்படையிலான பகுதியான ஹபரண பிரதேசத்தில் திறக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் கொரியா சுற்றுலா அமைச்சினால் 500 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சுற்றுலாச் சேவை மையம் மற்றும் சுற்றுலா வரவேற்பு நிலையம் என்பனவைகளை வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச மற்றும் கொரியா பிரதி உயர்ஸ்தானிகர் ஜ/ன் சோனி ஆகியோரினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது கொரியா சுற்றுலா அமைப்பின் அதிகாரிகள் சுற்றுலா அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.எல். நசீர் சுற்றுலா அமைப்பின் தலைவர் புத்திக ஹேவாவசம் வடமத்திய மாகாண சுற்றுலா பணிப்பாளர் தில்ருக் ரத்னாயக்க மற்றும் சுற்றுலா சபை அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## தம்புத்தேகம பெல்லன்கடவல

# வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு; ஐவர் படுகாயம்





விபத்தில் இரண்டு லொறிகளும் பலத்த சேதமடைந்துள்ளதுடன். வீதியோரங்களில் இருந்த பல கடைகளும் சேதமடைந்துள்ளன.

**(எம்.ரீ.ஆரிப்)**

அநுராதபுரம் பாதெனிய பிரதான வீதியில் தம்புத்தேகம பெல்லன்கடவல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஐந்து பேர் காயமடைந்துள்ளதாக தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புத்தேகமவில் இருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த டிமோ பட்டா ரக லொறி ஒன்றும் அநுராதபுரத்தில் இருந்து தம்புத்தேகம நோக்கி பயணித்த லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியுள்ளது. குறித்த

தம்புத்தேகம பகுதியில் இருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த மாம்பழம் சேகரிக்கச் சென்ற டிமோ பட்டா ரக லொறி ஒன்றும் அநுராதபுரம் பகுதியில் இருந்து மரக்குற்றிகள் ஏற்றிச்சென்ற பிரைம் மூர் ரக லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியிள்ளதுடன் குறித்த லொறி மரத்துடன் மோதி நின்றுள்ளது.

விபத்தில் ஆறு பேர் காயமடைந்துள்ளதுடன். இருவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் டிமோ பட்டா லொறியின் சாரதி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது.

# பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்த காட்டு யானை

**(எம்.ரீ.ஆரிப்)**

மொரகொட வனவிலங்கு வலயத்திற்குட்பட்ட உனகொல்லேவ கிராமத்தில் பயிர்ச்செய்கைக்காக வெட்டப்பட்ட பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்த காட்டு யானை ஒன்று மீட்கப்பட்டுள்ளது. உனகொல்லேவ கிராமம் தொடர்ந்து காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. மானங்கட்டிய மற்றும் ரிட்டிகல வனங்களில் இருந்து இரவு வேளையில் உணவு தேடி வந்த காட்டு யானை கிணற்றில் வீழ்ந்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றார்கள். மொரகொட மற்றும் சிட்டிகல வனவிலங்கு அதிகாரிகள் காட்டு யானையை மீட்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். ஜேசிபி இயந்திரம் மூலம் காட்டு யானையை மீட்டனர். கிணறு சுமார் 40 அடி ஆழம் கொண்டதாகவும் பெய்து வந்த மழையினால் கிணறு முழுமையாக நிறம்பியுள்ளதாகவும் வனவிலங்கு அதிகாரிகள் கடும் சிரமத்திற்கு மத்தியில் யானையை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். காட்டு யானை கரைக்கு வந்ததையடுத்து ஜேசிபி இயந்திரத்தை தாக்கிவிட்டு உனகொல்லேவ வனத்தினுள் யானை தப்பிச் சென்றுள்ளது.

# ஒளிவிழாவும் ஆசிரியர் கௌரவிப்பும்





நீர்கொழும்பு பிரைட்வே மிராக்கல்ஸ் பாலர் பாடசாலையின் வருடாந்த ஒளிவிழா மற்றும் ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.

## அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின்

# மாத்தறை நிர்வாக சபை உறுப்பினர்கள்

**(வெலிகம நிருபர்)**

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் மாத்தறை மாவட்டம், மற்றும் மாத்தறை கிளை, வெலிகம கிளை ஆகியவற்றுக்கான நிர்வாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்யும் நிகழ்வு, அண்மையில் வெலிகம மீராஸாஹிப் ஜு/ம்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றன.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவினால் நியமிக்கப்பட்ட குழுவினரே வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்தனர்.

இதற்கமைய, மாத்தறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவராக வெலிகம பாரி அறபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷேக் அல்-ஹாபிழ் ஏ.ஆர்.எம். அப்துர்ரஹ்மான் (மழாஹிரி), பொதுச் செயலாளராக அஷ்ஷேக். எம்.எம்.எம். முன்திர் (நளீமி), பொருளாளராக அஷ்ஷேக் எம்.யூ.எம். வாலிஹு (அல்-அஸ்ஹரி), உப தலைவர்களாக ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் அஷ்ஷேக் எம்.ஏ.எம். இப்ளால் (பாரி), வெலிகம ஹிழ்ரிய்யா அறபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷேக் முப்தி நஜிமுதீன் (ஹிழ்ரி), உப செயலாளராக அஷ்ஷேக் அல்-ஹாபிழ் ஹிதாம் (பாரி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். வெலிகம கிளை தலைவராக அஷ்ஷேக் எம்.எஸ்.எம். பாயிஸ் (ஹிழ்ரி), செயலாளர் எம்.என்.எம். ஷிஹான் (முர்ஸி), பொருளாளர் அஷ்ஷேக் அல்-ஹாபிழ் ஏ.ஸி. அப்துல்லாஹ் (ஹிழ்ரி), உப தலைவர்களாக அஷ்ஷேக் எம்.ஏ.எம். இப்ளால் (பாரி), அஷ்ஷேக் கலீபதுஷ்ஷாதுலி எம்.ஏ.ஏ.எம். பிஷ்ர் (பஹ்ஜி), உப செயலாளராக அஷ்ஷேக் எம்.யூ.எம், வாஸில் (நளீமி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.மாத்தறை கிளை தலைவர் அஷ்ஷேக் அல்-ஹாபிழ் ஏ.ஆர். அப்துர்ரஹ்மான் (மழாஹிரி), செயலாளர் அஷ்ஷேக் அல்-ஹாபிழ் எம்.எஸ்.எம். ரௌலான் (பாரி), பொருளாளர் அஷ்ஷேக் அல்-ஹாபிழ் எம்.என்.எம். ஹிதாம் (பாரி), உபதலைவர்கள் அஷ்ஷேக் அனஸ் (ஹாஷிமி), அஷ்ஷேக் அர்ஷத் (ஹிழ்ரி), உப செயலாளர் அஷ்ஷேக் அல்-ஹாபிழ் முஸ்தபா (பாரி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு இலவசமான வைத்திய முகாம்

**(எம்.யூ.எம். சனூன்)**





அகில இலங்கை பாரம்பரிய சுதேச வைத்திய சங்கத்தின், புத்தளம் பாரம்பரிய சுதேச வைத்திய பாதுகாப்பு சபை மற்றும் புத்தளம் பாரம்பரிய சுதேச வைத்திய நிலையத்துக்கும் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு இலவசமான வைத்திய சிகிச்சை முகாம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (15) புத்தளம் கொழும்பு வீதி பௌத்த மத்திய நிலையத்துக்கு முன்பாக அமைந்திருக்கின்ற ”ஹெல வெத மஹ கெதர” வைத்திய சிகிச்சை நிலையத்தில் நடைபெற்றது. புத்தளம் பாரம்பரிய சுதேச மருத்துவ நிபுணர்கள் பலர் இதில் கலந்து கொண்டு இந்த இலவ சமான வைத்திய சிகிச்சைகளை வழங்கினார்கள். அதிகமான நோயாளிகள் இதில் கலந்து கொண்டு இலவசமாக வைத்திய சிகிச்சைகளை பெற்றுக்கொண்டனர்.

## ஸ்ரீ வெங்கடேஸ்வராவில்

# வருடாந்த சிறுவர் சந்தை





**(எம்.யூ.எம்.சனூன், க.மகாதேவன்)**

உடப்பு ஆண்டிமுனையில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா பாலர் பாடசாலையின் வருடாந்த சிறுவர் சந்தை அண்மையில் நடைபெற்றது. முன்பள்ளி மாணவர்கள் தமது பணப்பரிமாற்றம் மற்றும் கொடுக்கல் வாங்கல்களை இதன் போது அனுபவ ரீதியாக கற்றுக் கொண்டனர். ஓய்வு பெற்ற உப அதிபர் சிவசுப்பிரமணியம், கிராம உத்தியோகத்தர் வை.சிவகாந்த், ஓய்வு நிலை ஆசிரியர் க.மகாதேவன் ஆகியோர் இந்த நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்டனர். இதில் பொது மக்கள் பலர் கலந்து கொண்டு பொருட்களை ஆர்வத்துடன் கொள்வனவு செய்தனர்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி

**(வெலிகம நிருபர்)**



நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் உயிர்ச் சேதங்கள் மற்றும் பொருள் சேதங்கள் ஏற்பட்டன.இதனைக் கருத்திற் கொண்டு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் மாத்தறை மாவட்டம், மாத்தறை கிளை, மற்றும் வெலிகம கிளை ஆகியன ஒன்றிணைந்து பிரதேச மக்களிடமிருந்து சுமார் 30 இலட்சம் ரூபா பணம் சேகரிக்கப்பட்டது.

இப் பணத்தை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் வழிகாட்டலுக் கமைய பாதிக்கப்பட்ட வவுனியா மக்களுக்கும், ஷஹீதாக்கப்பட்ட சம்மாந்துறை மத்ரஸா மாணவர்களின் குடும்பங்களுக்கும், மற்றும் சாரதி உதவியாளரின் குடும்பங்களுக்கும் கையளிக்கப்பட்டன. இந் நிகழ்வில் மாத்தறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷேக் அல்-ஹாபிழ் ஏ. ஆர். அப்துர்ரஹ்மான் (மழாஹிரி) செயலாளர் அஷ்ஷேக் எம். எம். எம்.முன்திர் (நளீமி) பொருளாளர் அஷ்ஷேக் எம்.யூ.எம். வாலிஹு (அல்-அஸ்ஹரி) உப தலைவர் அஷ்ஷேக் முப்தி நஜிமுதீன் (ஹிழ்ரி) மற்றும் வெலிகம ஜம்இய்யதுல் உலமா சபையின் செயலாளர் அஷ்ஷேக் எம்.என்.எம். ஷிஹான் (முர்ஸி) ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாற்றங்கள் வரும் என்று நம்பினார்கள் மக்கள்



தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பல மாற்றங்களை ஏற்படுத்துவார்கள் என்று நினைத்து வாக்களித்தார்கள். மக்களுக்கு வெறும் ஏமாற்றம் மாத்திரமே எஞ்சியுள்ளதென நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியா சோலை வெட்டுவான்,மயிலடைப்பஞ்சேனை மக்களுக்கு ஞாயிற்றுக்கிழமை (15) உலர் உணர்வுப் பொருட்களை வழங்கும் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பொருட்களை வழங்கி வைத்தார்.

சுமார் 86 உலர் உணவுப் பொதிகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.இதில் கிண்ணியா நகர சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எம்.மஹ்தி உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

உலர் உணர்வுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்

அரசாங்கம் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் மக்களில் மாற்றங்களை கொண்டு வருவார்கள் என தெரிவு செய்த போதிலும் சீரற்ற கால நிலையால் பாதிக்கப்பட்ட மக்களை கூட கவனிக்கவில்லை. எனவே தான் அரசாங்கத்திடம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களையும் நஷ்டஈடுகளை வழங்குமாறு கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

தேர்தல் காலங்களில் புதியவர்களை திறமையானவர்களை படித்தவர்களை தெரிவு செய்வோம் என கூறிய போதிலும் தற்போதைய சபாநாயகர் பதிவி கலாநிதி பட்டம் தொடர்பில் அவர்களே நம்பிக்கையிழந்து மக்களை ஏமாற்றியுள்ளார்கள் இன்னும் எதை எதையெல்லாம் சொல்லி ஏமாற்றப்போகிறார்கள் இதனால் மக்கள் அதிர்ப்திக்கு உள்ளாகியுள்ளார்கள். தேர்தல் காலங்களில் இந்த அரசாங்கம் படித்தவர்கள் வரவேண்டும் பட்டம் பெற்றவர்கள் வரவேண்டும் புதியவர்கள் வரவேண்டும் என்றெல்லாம் கூறினார்கள் சென்ற அமைச்சரவை வழங்குகின்ற போது முஸ்லிம்களுக்கு தகுதி இல்லை என்று பேசினார்கள். அதனால் வழங்கப்படவில்லை என்று கூறினார்கள். இன்று மக்கள் மத்தியில் என்ன சொல்லப் போகின்றார்கள் .

சபாநாயகர் பதவி என்பது கலாநிதி பட்டம் எடுத்தவர்களுக்கு வழங்குவதில்லை.இன்னும் என்னென்ன விடயங்களில் இவர்கள் மக்களை ஏமாற்றி உள்ளார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம் எனக் கூறினார்.

# ஊடகவியலாளர்களுக்கு இரு நாள் பயிற்சி செயலமர்வு

(ஆரையம்பதி நிருபர்)



கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கு நில உரிமை தொடர்பான இரண்டு நாள் பயிற்சி செயலமர்வு சனி மற்றும் ஞாயிறு தினங்களில் திருகோணமலை தனியார் விடுதியில் நடைபெற்றது.

இப்பயிற்சி செயலமர்வு அகம் மனிதாபிமான வள நிறுவனத்தினால் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் செயற்படும் ஊடகவியலாளர்களை ஒன்றிணைத்து இப்பயிற்சி நடாத்தப்பட்டது.

நில மீட்புக்கான செயற்றிட்டத்தின் கீழ், கிழக்கு மாகாணத்தில் மக்கள் எதிர்கொள்ளும் நிலம்சார் பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக் கொடுக்கும் வகையில் கிழக்கு மாகாணத்தில் ஊடக வலையமைப் பினை நிலம்சார் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதற்கும் இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இச் செயலமர்வில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பள்ளவக்குளம், திரியாய் கிராமங்களில் அண்மையில் இடம்பெற்ற விவசாய காணிகள் பிரச்சினைகள் தொடர்பாகவும் கள விஜயம் ஒன்று மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ந்து குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிற்கு கள விஜயத்தை மேற்கொண்டு குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு உற்பட்ட திரியாய் கிராமங்களில் காணி பிரச்சினைகள் தொடர்பான அப்பிரதேச மக்களுடனான சந்திப்பை மேற்கொண்டு அவர்களுடைய காணி பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

# தேர்தல் காலமும் ஊடக சட்டங்களும்; பயிற்சி பட்டறை

(ஜெனபர் ஏ கரீம்)

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் ளுக்கு தேர்தல் காலத்தின் போது ஊடக சட்டங்களுக்கு அமைவாக எவ்வாறு அறிக்கை இடல் எனும் தொனிப்பொருளிலான ஒரு நாள் பயிற்சி பட்டறை நேற்று முன்தினம் அம்பாறை நகரசபை வாடி வீட்டு மண்டபத்தில் நடைபெற்றது. ஆசியா பவுண்டேஷன் அனுசரணையில் இலங்கை இளைஞர்கள் வலைப்பின்னல் அமைப்பின் லயன் பணிப்பாளர் அருண் பிரதிப் குமார தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபயவிக்ரம பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இதன் போது சட்டத்தரணி ஜகத் லியனாராட்சி வளவாளராக கலந்து கொண்டு தற்போது தேர்தல் காலத்தில் ஊடகவியலாளர் கள் சட்டத்திற்கு அமைவாக ஊடக அறிக்கை இடல் தொடர்பில் செயன்முறை ஊடாக விரிவாக விளக்கமளித்ததுடன் இது தொடர்பாக அவரால் எழுதப்பட்ட "தேர்தல் காலமும் ஊடக சட்டங்களும்" எனும் தலைப்பிலான நூலும் ஊடகவியலாளர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

# பைஷல் இஸ்மாயிலுக்கு "சாஹித்ய மாகாண விருது"



கிழக்கு மாகாண பண்பா ட்டலுவல்கள் திணைக் களத்தினால் நடாத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டு மாகாண இலக்கிய விழாவில் ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் சமூக விஞ்ஞானம் (ஆயுள்வேதம்) "சாஹித்ய மாகாண விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ. ஜி. திசாநாயக்க தலைமையில் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இவ்விழாவின்போது கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீலினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம், சான்றிதழ் மற்றும் காசோலை போன்றன வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பொதுமக்களுக்கு நோய் பற்றிய தெளிவையும், அதிலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெற்றுக்கொள்ளலாம் என்ற விழிப்புணர்வுகளை வழங்கும் நோக்கில், துறைசார் வைத்திய நிபுணர்கள் ஊடாக பெற்றுக்கொண்ட மருத்துவ ஆக்கங்களை "நலன் தரும் மருத்துவம்" என்ற பெயரில், சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் தொகுத்து வெளியீடு செய்திருந்தார். அந்நூல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்பட்டு "சமூக விஞ்ஞானம்" (ஆயுள்வேதம்) "சாஹித்திய மாகாண விருதை வழங்கி கௌரவித்தனர்.

# கல்முனை மெதடிஸ்த திருச்சபையில் நத்தார் இன்னிசை வழிபாடு





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை மெதடிஸ்த திருச்சபை ஏற்பாடு செய்து நடாத்திய நத்தார் இன்னிசை வழிபாடு அருட்திரு ரவி முருகுப்பிள்ளை அவர்களின் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் ஆண்கள், பெண்கள், ஞாயிறு பாடசாலை மாணவர்கள், வாலிபர் சங்க அங்கத்தினர்கள் போன்றோரால் நத்தார் கீதங்கள் இசைக்கப் பட்டன. ஒப்பற்ற பரிசு கிறிஸ்துவே என்ற தலைப்பில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு திருமாவட்ட அவையின் முன்னாள் தலைவர் அருட்திரு எஸ்.டி தயாசீலன் இறை செய்தியை வழங்கினார்.

இவ்வழிபாட்டில் அருட்செல்வி சுலோஜினி, சகோதரி அதிஸ்டவதி, அருட் சகோதரர் கதிரேசன் உட்பட திருச்சபைகளின் மக்களும் கலந்து சிறப்பித்தனர்.

## அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையம்

# தேசிய மட்ட சங்கீத, நடன போட்டிகளில் முதலிடம்

(அக்கரைப்பற்று நிருபர்)



புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட கலாசார மத்திய நிலையங்களுக்கிடையிலான பிரதிபா தேசிய மட்ட சங்கீத, நடனப் போட்டிகளில் அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையம் ஐந்து போட்டிகளில் முதலிடமும், தேசிய ரீதியில் முன்னிலையைப் பெற்றமைக்கு சிறப்பு சுழுதா விருதும் பெற்று அகில இலங்கை ரீதியில் சாதனை படைத்துள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையம் கிராமிய பாடல் சிரேஷ்ட பிரிவு குழு, பொப் பாடல் குழு, ஆரம்பப் பிரிவு சிறுவர்களின் மழை நடனக் குழு, திருமண ஊர்வலம் அதாவது மாப்பிள்ளை பைத் குழு, றபான் நடனம் குழு போன்ற போட்டி நிகழ்ச்சிகளில் முதலாம் இடங்களையும், சிறப்பு விருதாக சுழுதா விருதினையும், பக்கீர் பைத் தனி, கர்நாடக சங்கீதம் தனி, கிராமியப் பாடல் கனிஷ்டம், நாதஸ்வரம் தனி போன்ற நான்கு போட்டி நிகழ்ச்சிகளில் இரண்டாம் இடங்களையும் பெற்று தேசிய ரீதியில் சாதனை படைத்து விருதுகள் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டன. அலரி மாளிகையில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் புத்தசாசன சமய, மற்றும் கலாசார விவகார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க மற்றும் அமைச்சின் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டு அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி ஐ.எல். நிஸ்வான் மற்றும் போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற அனைவருக்கு விருதுகளையும், சான்றிதழ்களையும் வழங்கிவைத்தார்கள்.

# ஹிஸ்புல்லாஹ்வுக்கு கௌரவம்



(மாளிகைக்காடு நிருபர்)

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எல். எம்.ஏ. ஹிஸ்புல்லாஹ் கௌரவிக்கும் நிகழ்வு காத்தான்குடி பள்ளிவாசல் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தில் நடைபெற்றது. காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஏ.எம்.எம். தௌபீக் தலைமையில் சம்மேளனத்தின் மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமைக்கு பொன்னாடை போற்றி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு இதன்போது நடைபெற்றது.

இந் நிகழ்வில் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பிரமுகர்கள், உலமாக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று பதுர் மையவாடி சிரமதானம்

(றிஸ்வான் சாலிஹூ)



"அக்கரைப்பற்று ஜனாஸா பௌண்டேஸன்" அமைப்பின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று கடற்கரை பதுர் முஸ்லிம் மையவாடி சிரமதான நிகழ்வு அண்மையில் பிரதேச இளைஞர்கள் மற்றும் முதியவர்களின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது. "மண்ணறையை நினைவூட்டும் மையவாடியை சுத்தம் செய்ய முன்வருவோம், மையவாடியை சுத்தம் செய்வது எமது ஒவ்வொருவரினதும் தார்மீக கடமை" என்ற நோக்கத்தின் அடிப்படையில் இப்பிரதேசத்தை சேர்ந்த உலமாக்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் இச்சிரமதான பணியில் கலந்து கொண்டனர்.

# பள்ளிவாசலில் உண்டியல் திருட்டு

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு ஆரையம்பதி பாலமுனை பிரதேசத்தில் பள்ளி வாயல் உண்டியல் களவாடப்பட்டுள்ளது.நேற்று திங்கட்கிழமை அதிகாலை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. பாலமுனை புதிய பாலமுனை முகைதீன் ஜும்ஆப் பள்ளிவாயலிலேயே பள்ளி வாயல் உண்டியல் திருடப்பட்டுள்ளது. பள்ளி வாயலுக்குள் நுழைந்த இளைஞனொருவன் பள்ளி வாயல் உண்டியலை திருடுவது பள்ளி வாயலின் சிசிரி காணொளியில் பதிவாகியுள்ளது.

இது தொடர்பாக பள்ளி வாயல் நிர்வாகத்தினர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 'எலிக்காய்ச்சல் நோயிலிருந்து எம்மைப் பாதுகாப்போம்'

(அக்கரைப்பற்று நிருபர்)

எலிக்காய்ச்சல் உயிர் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு ஆபத்தான நோயாகும். பரவலாக இலங்கையின் பல பாகங்களிலும் மழையுடனான காலநிலை நிலவி வருவதனால் எலிக்காய்ச்சல் பரவும் சந்தர்ப்பம் மிகவும் கூடுதலாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

எலிக்காய்ச்சல் நோயானது லெப்டோஸ்பைரா எனும் பக்டீரியாவால் ஏற்படும் ஒன்றாகும். எலி மற்றும் காவும் விலங்குகளின் சிறுநீர் மூலம் மாசடைந்த நீர் மற்றும் மண்ணில் இப் பக்டீரியா காணப்படுகிறது. தோலில் உள்ள வெட்டுக் காயங்கள், சிராய்வுகள், மூக்கு, வாய், அல்லது கண்களில் உள்ள மென் சவ்வுகள் ஊடாக பக்டீரியாக்கள் உடம்பினுள் உட்சென்று தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

குறிப்பாக வயல் நிலங்களில் வேலை செய்யும் விவசாயிகள், சேறு சார்ந்த இடங்களில் பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்கள் ஆறுகள், வயல் வெளிகளில் செங்கல் தயாரித்தலில் ஈடுபடுபவர்கள் அல்லது மணல் மண் அள்ளுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவருபவர்கள், இரத்தினக் கல் சுரங்கத் தொழிலாளர்கள், சேற்று நிலம் அல்லது நீர் தேங்கிய இடங்களில் விளையாட்டு அல்லது அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களுக்கு எலிக் காய்ச்சல் தொற்றக் கூடிய அதிக ஆபத்து காணப்படுகிறது.

இதனால் லெப்டோஸ்பைரா பக்டீரியா தாக்கத்திற்குள்ளானால் அதிகமான காய்ச்சல், கடுமையான தலை வலி, கண் சிவந்து காணப்படுதல் போன்ற பிரதான அறிகுறிகளுடன், வந்தி, தலைபிடி, உடல் பலவீனம், சிறு நீருடன் இரத்தம் வெளியேறுதல், சிறு நீர் வெளியேறும் அளவு குறைதல் போன்றவை ஏற்படும்.அவ்வாறு மேற்கூறப்பட்ட அறிகுறிகள் இருக்குமானால் உடனடியாக வைத்திய நிபுணரை சந்தித்து சிகிச்சை மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். சரியான நேரத்தில் சிகிச்சை எடுத்துக் கொள்ளாவிட்டால் இந் நோய் சிறு நீரகம், இதயம் மற்றும் மூளை போன்ற உடல் உறுப்புக்களை தாக்கி மரணத்தை ஏற்படுத்தும். எனவே எலிகளின் தொற்றுக்களில் இருந்து தடுப்பதற்கு வயல் வெளிகளில் சுற்றுப்புற சூழலை சுத்தமாக வைத்திருப்பதுடன், வயல்களை சரியான முறையில் பராமரிக்கவும், வயல்களுக்குள் செல்வதற்கு முன்னர் தோலில் ஏதேனும் சிராய்வுகள் அல்லது காயங்கள் பாதங்களில், கை விரல்களில் இருந்தால் அதனை நீர் உட்புகாத வகையில் கட்டுதல் வேண்டும். தேவையில்லாமல் நீர் தேங்கியிருக்கும் இடங்களுக்கோ அல்லது சேற்று நிலங்களுக்கோ போவதை தவிர்ப்பதுடன், இவ்வாறான இடங்களில் குளிப்பதையோ, கழுவுவதையோ தவிர்த்தல் வேண்டும். நீங்கள் எலிக்காய்ச்சல் நோயிலிருந்து பாதுகாப்பு பெற வயல்களுக்கு செல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பதாக நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொது சுகாதார பரிசோதக ரகளிடமிருந்து பெற்றுக் கொண்டு முற்பாதுக ாப்பினை பெற்றுக் கொள்வது மிகவும் பாதுகாப்பானதாகும்.



# காலி மார்வெல்ஸ் அணி உரிமையாளருக்கு விளக்கமறியல்

ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட லங்கா T10 சுப்பர் லீக் தொடரின் காலி மார்வெல்ஸ் அணியின் உரிமையாளரான இந்திய பிரஜை பிரேம் தக்கரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கண்டி, பல்லேகலயில் நடைபெற்று வரும் லங்கா T10 சுப்பர் லீக் கிரிக்கட் போட்டியில் தனது அணியின் வீரர் ஒருவருக்கு ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபடுமாறு கூறிய குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மலையகத்துக்கு மாடி வீடு; அரசுக்குள் முரண்பாடான கருத்து

## இ.தொ.கா பிரதித் தலைவர் கணபதி கனகராஜ்



▌எம்.ஏ.அமீனுல்லா

அரசாங்கத்துக்குள்ளேயே முரண்பாடான கருத்துக்களைத் தெரிவிப்பது மக்களைக் குழப்பமடையச் செய்திருக்கிறது என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

மலையகத்தில் வீடமைப்பதற்கு காணிகளை வழங்காமல் மாடி வீடுகளை அமைப்பதற்கு அரசு ஆலோசித்து வருவதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திர கீர்த்தி தெரிவிக்கின்ற அதே வேளை, தொடர்மாடி வீடுகளை அமைப்பதற்குத் தீர்மானிக்கவில்லை என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவிக்கின்றார். இது மக்களை குழப்பமடையச் செய்கிறது.

பெருந்தோட்ட குடியிருப்பு பிரதேசத்தைக் கிராமமாக மாற்றுவது தொடர்பில் கடந்த காலங்களில் தொடர்ச்சியான கலந்துரையாடல் நடைபெற்றிருக்கின்றன. இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடனும், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் நிதி பங்களிப்புடனும் ஆயிரக்கணக்கான தனி வீடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வீடுகளுக்கான காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்குக் கடந்த அரசாங்க காலத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வாறு முன்னாள் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் தயாரித்து முடிவுறுத்தப்பட்ட காணிகளுக்கான உறுதிப் பத்திரங்களைப் பிரதி அமைச்சர் பிரதீப் சுந்தரலிங்கம் வழங்கி வைத்திருக்கிறார்.

200 வருடங்கள் இந்த நாட்டுக்காக அர்ப்பணித்த தொழிலாளர் சமூகத்துக்கு வீடு அமைப்பதற்கு காணி வழங்குவதற்கு அரசாங்கம் தற்போது பின்னடிப்பதாக தெரிகிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடமைப்பதற்கு காணிகள் வழங்கப்படும் என உறுதி அளித்திருந்தார். ஆனால் தற்போது பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் அதற்கு முரண்பாடான கருத்துக்களைத் தெரிவிக்கிறார்.

அதே நேரத்தில் அமைச்சருக்கும் அமைச்சின் செயலாளருக்கும் பொதுவான கருத்து நிலைப்பாடு இல்லை. அவ்வாறெனில் பிரதி அமைச்சருக்குத் தெரியாமல் அரசாங்கம் செயலாளர் மட்டத்தில் தீர்மானங்களை மேற்கொள்கிறதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடத்திச் சென்ற முச்சக்கர வண்டிகள் மீட்பு: ஒருவர் கைது



▌கி.வசந்தன்

வவுனியாவில் மயக்க மருந்து கொடுத்து முச்சக்கர வண்டிகளைத் திருடி விற்பனை செய்த நிலையில் இரு முச்சக்கர வண்டிகள் மீட்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிசார் நேற்று (16) தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரப் பகுதியிலிருந்து சிவப்பு நிற முச்சக்கர வண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்திச் சென்று, முச்சக்கர வண்டி சாரதிக்கு மயக்க மருந்தை கொடுத்து அவரை கீழே விழுத்தி விட்டு, குறித்த முச்சக்கர வண்டியை கடந்திச் சென்ற சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது.

அதுபோன்று, வவுனியா, பூவரசன்குளம் பகுதியிலிருந்து உளுக்குளம் நோக்கி முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்திச் சென்று சாரதிக்கு மயக்க மருந்து கொடுத்து முச்சக்கர வண்டி ஒன்று கடத்திச் செல்லப்பட்ட இரு சம்பவங்களும் பதிவாகியிருந்தன.

இது தொடாபான விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வவுனியா நகரப் பகுதியில் கடத்தப்பட்ட முச்சக்கர வண்டிக்கு நீல நிற வர்ணம் பூசி வாகன இலக்கத்தகடு மாற்றப்பட்டு கெக்கிராவ பகுதியில் மீட்கப்பட்டது.

அத்துடன் பச்சை நிற முச்சக்கர வண்டி 9 இலட்சம் ரூபாய்க்கு இலக்கத்தகடு மாற்றி விற்பனை செய்யபபட்ட நிலையில் சாய்ந்தமருது பகுதியில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த இரு சம்பவம் தொடர்பில் கெக்கிராவ பகுதியில் வசித்து வரும் 37 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை, வாகனங்களை வாடைக்கு அமர்த்தி வருவோர் தரும் குடிபானங்களை அருந்தாது விழிப்புடன் செயற்படுமாறும் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

# வடக்கில் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குமுன் கையொப்பம்!

## ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டு



▌பு.கஜிந்தன்

இலங்கையில் ஏனைய மாகாணங்களின் கீழ் இயங்கும் கல்வித் திணைக்களங்களில் ஆசிரியர்களுக்கான சம்பளங்கள் வழங்கப்பட்ட பின்னரே சம்பளப் பட்டியலில் கையொப்பம் பெறப்படுகிறது.

ஆனால் வடக்கு மாகாணத்தில் மட்டும் சம்பளம் வழங்குவதற்கு முன்னரே சம்பளத்தை வங்கிக் கணக்கில் பெற்று விட்டதாக ஆசிரியர்களிடம் கையொப்பம் பெற்ற பின்னரே வைப்பில் இடப்படுகிறது.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின், மாகாண பிரதம கணக்காளர் உட்பட மாகாண கல்வித் திணைக்கள பணிப்பாளர் வரை தொடர்பு கொண்டு சுட்டிக்காட்டிய போது தவறை ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சம்பளத்தை வழங்க முதலே பெற்றுவிட்டோம் என ஆசிரியர்களிடம் கையொப்பம் பெறுவதும் ஒருவேளை கையொப்பமிட்டு ஆசிரியர் இறந்துவிட்டால் அவரது சம்பளம் கிடைக்குமா என்ற கேள்விகளும் எழுந்துள்ளது. ஆகவே முறையற்ற கையெழுத்திடல்கள் ஊழலுக்கு வழிவகுக்கும்.

அதுமட்டுமல்லாது அவ்வாறு கையொப்பம் இடாத ஆசிரியர்களின் சம்பளத்தை பிடித்து வைக்கும் வேடிக்கையும் வடக்கில் சில வலயங்களில் இடம்பெற்றுள்ளதாக அறியமுடிகிறது.

ஆகவே குறித்த விடயம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உரிய கவனம் செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பொலிஸ் உத்தியோகத்தர் மரணம்; இரு சந்தேக நபர்கள் கைது

வத்தேகம பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்த வீதி விபத்து தொடர்பில் தேடப்பட்டு வந்த இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்ட காருடன் காரின் சாரதியும் மாத்தளையில் நேற்று கைது செய்யப்பட்டதாகவும், காரை மறைப்பதற்கு அவருக்கு உதவிய மற்றுமொரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் 46 மற்றும் 48 வயதுடைய மாத்தளை மற்றும் உடிஸ்பத்துவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள். சந்தேக நபர்கள் தொடர்பில் வத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிவனொளிபாதமலை யாத்திரை; விசேட பஸ் சேவைகள் ஆரம்பம்



சிவனொளிபாதமலை பருவகாலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் யாத்திரிகர்களின் நலன் கருதி விசேட பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்திலிருந்து ஹற்றன் வரை வழமையாக இடம்பெறும் பஸ் சேவைகளுக்கு மேலதிகமாக வார இறுதி நாட்களில் நல்லதண்ணிய வரை மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஹற்றன் ரயில் நிலையத்திற்கு அருகிலிருந்து நல்லதண்ணி வரையிலும் விசேட பஸ் சேவைகள் இடம்பெறுவதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

# சாஹித்திய விழாவை முன்னிட்டு புத்தக - சித்திர கண்காட்சி



▌இரத்தினபுரி நிருபர்

எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெற உள்ள சப்ரகமுவ மாகாண சாஹித்திய விழாவை முன்னிட்டு சப்ரகமுவ மாகாண சபை கட்டிடத்தொகுதியில் புத்தக மற்றும் சித்திர கண்காட்சி நேற்று (16) சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக் கண்காட்சி (16) முதல் 19ஆம் திகதி வரை நான்கு நாட்கள் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனு அராச்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மலையகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல்





▌க.கிஷாந்தன்

பிரிடோ பெண்கள் வலய அமைப்பின் ஏற்பாட்டில் ஹற்றனில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளைத் தடுத்தல் தொடர்பாக விசேட நிகழ்வுகள் நடைபெற்றன.

பெண்களுக்கு எதிரான மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை ஒழிப்பதற்கான தேசிய செயற்றிட்டம் நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் கடந்த நவம்பர் 25ம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை நடைபெற்றது.

அந்த வகையில் பிரிடோ நிறுவனம் நுவரெலியா மாவட்டத்தில் தோட்டபுற மக்களுக்கு பல்வேறு விழிப்புணர்வு திட்டங்களை முன்னெடுத்த வந்த நிலையில் நேற்று முன்தினம் பிரிடோ நிறுவன நிறைவேற்று பணிப்பாளர் மைக்கல் ஜோக்கிம் தலைமையில், பிரிடோ பெண்கள் வலய அமைப்பின் ஏற்பாட்டில் ஹற்றனில் விசேட நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது, தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலைச்செல்வி கலந்து கொண்டார்.

வீட்டில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளைத் தடுத்தல் மற்றும் பணியிடத்தில் பெண்கள் முகங்கொடுக்கும் துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கு இந்தத் திட்டம் ஊடாக பிரயோக ரீதியாகச் செயற்பட வேண்டும் என இதன்போது கலந்து கொண்ட பெண்கள் கருத்து தெரிவித்தனர்.

# கொள்ளுப்பிட்டியில் சடலம் மீட்பு



கொள்ளுப்பிட்டியில் உள்ள DSI கட்டிடத்தில் அடையாளம் தெரியாத சடலம் ஒன்று நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை கட்டிடத்தின் கீழ் மாடியில் சடலம் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் 65 முதல் 70 வயதுக்கு இடைப்பட்டவராகவும், 05 அடி 08 அங்குல உயரம் கொண்டவராகவும் இருக்கலாம் என கருதப்படுகிறது.

சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மரம் விழுந்து கடை சேதம்



▌கி.வசந்தன்

வவுனியா, புகையிரத நிலையம் முன்பாக இருந்த பழைமையான மரம் முறிந்து விழுந்ததில் அரச விடுதி ஒன்றும் வர்த்தக நிலையம் ஒன்றும் சேதமடைந்துள்ளது.

நேற்று (16) மதியம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் மீண்டும் அவ்வப் போது கனமழை பெய்து வருவதுடன், காற்றும் வீசி வருகின்றது. மதியம் வீசிய காற்றின் காரணமாக வவுனியா புகையிரத நிலையம் முன்பாக நின்ற பழையான பாரிய மரம் ஒன்று முறிந்து விழுந்துள்ளது.

இதன் காரணமாக, அருகிலிருந்து அரச விடுதியின் கூரைப் பகுதி சேதமடைந்துள்ளதுடன், வர்த்தக நிலையம் ஒன்றின் கூரை மற்றும் சுவர்ப் பகுதி என்பன உடைந்துள்ளது. அத்துடன் மின்சார இணைப்பும் அறுந்து மின் துண்டிப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் அவசியம்

## ஜெய்சங்கர் திட்டவட்டம்

டிஜிட்டல் உலகத்தில், மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப வெளியுறவுக் கொள்கையை மாற்றியமைக்க அவசியம் உள்ளது என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

டில்லியில் நடந்த விழாவில், உலக அளவில் வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருகிறது. வெளிநாட்டில் பணிபுரியும் இந்தியர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நீங்கள் யாருடைய தயாரிப்புகள் மற்றும் சேவைகளை நம்புகிறீர்கள், உங்கள் தரவு எங்கே இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்? உங்கள் தரவை உங்களுக்கு எதிராக மற்றவர்கள் எங்கே பயன்படுத்துவார்கள்? இவை அனைத்தையும் கண்காணிப்பது முக்கியம் என்று நான் நினைக்கிறேன். டிஜிட்டல் உலகத்தில், மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப வெளியுறவுக் கொள்கையை மாற்றியமைக்க அவசியம் உள்ளது.

இன்று, இந்தியா அதிக எதிர்பார்ப்புகள் உள்ள நாடாக உள்ளது, அதிக பொறுப்புகள் உள்ள நாடாக உள்ளது. முதல் பதிலளிப்பவராக இந்தியா உள்ளதா என்ற எண்ணம் அடிக்கடி எழும். அண்டை நல்லுறவுடன், இந்தியா சர்வதேசத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கும். புவிசார் அரசியலில் இந்தியாவின் பொறுப்புகள் வளர்ந்து வருகிறது. தேவைப்படும் நேரத்தில் இந்தியா தரப்பில் இருந்து முதலில் பதில் அளிக்கப்படும். புதிய யோசனைகள் உள்ளிட்டவற்றை தெரிவிப்போம் என மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.



# மத்திய அரசை கண்டித்து தமிழக விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

## 100 பேர் கைது

தமிழக கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கங்களின் சார்பில் மத்திய அரசின் செயற்பாட்டை கண்டித்து திருப்பூர் ரயில் நிலையத்தில் ரயில் மறியல் போராட்டம் அறிவிக்கப்பட்ட நிலையில் அதன் மாநில தலைவர் சண்முகம் தலைமையில் பெண்கள் உட்பட 100 விவசாயிகள் நேற்று காலை குமரன் சிலை முன்பாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கிருந்து ரயில் நிலையம் நோக்கி சென்ற போது பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

பா.ஜ.க அரசு விவசாயிகளுக்கு எதிராக அடக்கு முறையை கையாள்கிறது, விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணய சட்டம் கொண்டுவர வேண்டும், வேளாண்மைக்கான இலவச மின்சாரத்தை இரத்து செய்யும் மின்சார ஒழுங்குமுறை சட்டத்தை திரும்ப பெற வேண்டும், விவசாயிகள் பெற்ற கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும், எம்.எஸ்.பி கேட்டு சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஜெக்ஜித் சிங் டல்லேவால் அழைத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டனம், கோஷங்களை எழுப்பினர்.



தொடர்ந்தும் அங்கிருந்து ரயில் நிலையம் நோக்கி சென்ற போதே பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தி கைது செய்தமை குறிப்பிடத்தக்கது.




# கழிவுநீர் வடிகாலில் நச்சு வாயு கசிவு

## 10 மாணவர்கள் மயக்கம்

ராஜஸ்தானில் கழிவுநீர் வடிகாலில் ஏற்பட்ட திடீர் நச்சு வாயு கசிவால், பயிற்சி மைய மாணவர்கள் 10 பேர் மயங்கி விழுந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஜெய்ப்பூரில் உள்ள மகேஷ் நகரில் செயல்பட்டு வரும் பயிற்சி மையத்தில் ஏராளமானவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். திடீரென கழிவுநீர் வடிகாலில் நச்சு வாயு கசிந்துள்ளது. இதில், 10



மாணவர்கள் மயங்கி விழுந்தனர்.

பின்னர், அவர்களை அருகே இருந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அவர்கள் மூச்சு விடுவதில் சிரமம், தாங்க முடியாத தலைவலியால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். இதையடுத்து, அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதனிடையே, இந்த சம்பவம் குறித்து பதிலளிக்க வேண்டும் எனவும், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தியும் பயிற்சி மையத்திற்கு வெளியே மாணவர்களின் குடும்பத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தபேலா வாத்தியக் கலைஞர் ஜாகிர் ஹுசைன் காலமானார்

உலகப் புகழ்பெற்ற தபேலா கலைஞர் ஜாகிர் ஹுசைன் (Zakir Hussain) தனது 73 ஆவது வயதில் காலமானார்.

நாள்பட்ட நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர், அமெரிக்காவில் உள்ள சான் பிரான்சிஸ்கோவில் காலமானதாக அவரது குடும்பத்தினர் நேற்று (16) தெரிவித்தனர்.



ஹுசைன் கடந்த இரண்டு வாரங்களாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார், பின்னர் அவரது உடல்நிலை மோசமடைந்ததால் அவசர சிகிச்சை பிரிவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். அவரது மரணம் தொடர்பில் ஞாயிற்றுக்கிழமை (15) அறிக்கைகள் வெளிவந்தன. எனினும், அவர் உயிருடன் இருப்பதை உறுதிப்படுத்திய அவரது குடும்பத்தினரால் அது நிராகரிக்கப்பட்டது.

எவ்வாறெனினும், திங்கட்கிழமை காலை, அவரது குடும்பத்தினர் இந்தியா டுடேக்கு அளித்த அறிக்கையில், உலகின் மிகச்சிறந்த இசைக்கலைஞர்களில் ஒருவரான ஜாகிர் ஹுசைன், 73 வயதில் சான் பிரான்சிஸ்கோவில் காலமானதாக குறிப்பிட்டனர்.

சான் பிரான்சிஸ்கோவில் உள்ள இந்திய துணைத் தூதரகம் ஹுசைனின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளது. தபேலாவை உலக அரங்கிற்கு எடுத்துச் சென்ற ஜாகிர் ஹுசைன், புகழ்பெற்ற தபேலா வாத்தியக் கலைஞர் அல்லா ரக்காவின் மூத்த மகன் ஆவார். ஹுசைன் தனது தந்தையின் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில், இசை உலகில் ஒரு தனித்துவமான பாதையை செதுக்கினார். இந்தியாவிலும் உலக அளவிலும் புகழ் பெற்ற ஹுசைன், இந்த ஆண்டின் தொடக்கத்தில் 66 ஆவது கிராமி விருதுகளில் குறிப்பிடத்தக்க மூன்று விருதுகள் உட்பட, அவரது வாழ்க்கையில் ஐந்து கிராமி விருதுகளைப் பெற்றுள்ளார். இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற பாரம்பரிய இசைக்கலைஞர்களில் ஒருவரான ஹுசைன் 1988 இல் மதிப்புமிக்க பத்மஸ்ரீ, 2002 இல் பத்ம பூஷன் மற்றும் 2023 இல் பத்ம விபூஷண் ஆகிய பட்டங்களால் கௌரவிக்கப்பட்டார்.

அவரது ஆறு தசாப்த கால வாழ்க்கை முழுவதும், இசைக்கலைஞர் பல புகழ்பெற்ற இந்திய மற்றும் சர்வதேச கலைஞர்களுடன் ஒத்துழைத்துள்ளார்.

அவரது மரணம் குறித்த செய்தி வெளியான உடனேயே சமூக ஊடகங்களில் இரங்கல்கள் குவிந்தன, அமைச்சர்கள், பிரபலங்கள் மற்றும் பலர் தபேலா வித்துவானுக்கு தங்கள் நினைவுகளையும் அஞ்சலிகளையும் பகிர்ந்து கொண்டனர்.

# கார், லொறி மோதி விபத்து 6 பேர் உயிரிழப்பு, 7 பேர் காயம்

சத்தீஷ்கரின் பலோட் மாவட்டத்தின் தவுண்டி பொலிஸ் நிலைய பகுதியின் அருகே 13 பேருடன் சென்ற சொகுசு காரும், லொரியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் காரில் பயணித்த 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதோடு, 7 பேர் காயமடைந்தனர்.

இந்த சம்பவம் பற்றி பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் காயமடைந்தவர்களை மீட்ட பொலிஸார் அவர்களை அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்து குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




ஐந்து பெண்கள் மற்றும் ஒரு குழந்தை உட்பட காயமடைந்த ஏழு பேர் உள்ளூர் சமூக சுகாதார மையத்திற்கு மாற்றப்பட்டனர். அங்கிருந்து அவர்கள் மேல்சிகிச்சைக்காக ராஜ்நந்த்கான் மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். இவர்களில் இறந்தவர்கள் துர்பத் பிரஜாபதி (30), சுமித்ரா பாய் கும்ப்கர் (50), மனிஷா கும்ப்கர் (35), சகுன் பாய் கும்ப்கர் (50), இம்லா பாய் (55) மற்றும் சிறுவன் ஜிக்னேஷ் கும்ப்கர் (7) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

# இசைஞானி இளையராஜாவுக்கு கோயிலில் அனுமதி மறுக்கப்பட்ட சம்பவம்

## அறநிலையத்துறை அதிகாரி விளக்கம்

இசைஞானி இளையராஜா, சனிக்கிழமை இரவு ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலுக்கு சென்றார். அங்கு அவருக்கு கோவில் யானையை கொண்டு வரவேற்பு அளிக்கப்பட்டது. கோவிலுக்குள் சென்ற அவருக்கு, பரிவட்டம் கட்டி மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. ஜீயர் சுவாமிகளும் இளையராஜாவுக்கு மரியாதை செய்தார். இந்நிலையில், கருவறைக்குள் இளையராஜாவை அனுமதிக்கவில்லை என்றும், அவர் அவமதிக்கப்பட்டதாகவும், தகவல்கள் வெளியாகி சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

பொதுவாக கோயில் கருவறை என்று அழைக்கப்படும் கர்ப்ப கிரகத்தில் ஆதீனங்கள், மடாதிபதிகளுக்கு கூட உள்ளே செல்ல அனுமதியில்லை. கருவறையில் அந்தந்த கோவிலில் பூஜை செய்யும் ஸ்தானிகர்கள், பட்டாச்சாரியார்கள், பரம்பரை குருக்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். அதே கோயிலில், வேறு சன்னதியில்



பூஜை செய்யும் குருக்களாக இருந்தாலும் கருவறைக்குள் அனுமதிக்கப்படுவதில்லை. ஆகம விதிப்படி கட்டிய கோயில்களில், பண்டைய காலத்தில் இருந்து கடைபிடிக்கப்படும் நடைமுறையாக இது கருதப்படுகிறது. கர்ப்ப கிரகத்தை ஒட்டியுள்ள இடம் அர்த்தமண்டபம். இந்த மண்டபத்தில் பட்டர் குருக்கள், ஓதுவார்கள், மடாதிபதிகள், கோயில் அறங்காவலர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். இதனை, இடத்தை பொறுத்து கோவில் நிர்வாகம் முடிவு செய்யும்.அப்படி இருக்கையில், இளையராஜாவை முன் வைத்து இந்த சர்ச்சை வேண்டுமென்றே திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளதாக, சந்தேகம் எழுந்துள்ளது. இதற்கிடையே, இளையராஜா கோயிலுக்கு வந்தபோது நடந்தது என்ன என்று, அறநிலையத்துறை அறிக்கை அளித்துள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் சன்னதி அர்த்தமண்ட மடாதிபதிகள், அர்ச்சகர்கள் தவிர, மற்றவர்கள் உள்ளே செல்ல கோவில் வழக்கப்படி அனுமதி இல்லை என திரிதண்டி ஜீயர் தெரிவித்ததை இளையராஜா ஏற்றுக்கொண்டு அர்த்தமண்டபம் முன் நின்று தரிசனம் செய்தார் என அந்த அறிக்கையில் தெரிவிக்கபட்டுள்ளது.

# வயல் வெளியில் கவிழ்ந்த தனியார் பாடசாலை பஸ்;

## 6 சிறுவர்கள் காயம்

தனியார் பாடசாலை பஸ் 45 சிறுவர்களுடன் வயலில் கவிழ்ந்த விபத்தில் 6 சிறுவர்கள் காயமடைந்துள்ளனர். கோயில் அருகே வீரசிகாமணியில் தனியார் மெட்ரிக் பாடசாலை செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், நேற்று காலை நொச்சிகுளம் கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்கள் பாடசாலை பஸ் ஸில் சென்றுள்ளனர். அதன்போது நொச்சிகுளம் – வீரசிகாமணி வீதியில் சென்று கொண்டிருந்த பஸ் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து அருகேயுள்ள வயல் வெளியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், காயமடைந்த நான்கு சிறுவர்கள் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலும், சிறு சிறு காயங்களுடன் 2 சிறுவர்கள் வீரசிகாமணி மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பெரிய அளவு உயிர் சேதம் இல்லை என்ற போதிலும், ஒரே வாகனத்தில் 45 சிறுவர்களை ஏற்றி வேகமாக செல்வதாக பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' மசோதாவிற்கு தமிழக முதலமைச்சர் எதிர்ப்பு



கூட்டாட்சிக்கு எதிரான நடைமுறைக்கு மாறான ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற கொள்கையை இந்தியா கூட்டணி எதிர்க்கும் ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது ஒற்றை ஆட்சி முறைமைக்குள் எம்மை தள்ளிவிடும் அபாயமும், நாட்டின் பன்முகத்தன்மையையும் ஜனநாயகத்தையும் கொன்றுவிடும் முறைமையாகும்.

ஒரே நாடு ஒரே தேர்தலால் மாநில தேர்தல்கள் அவற்றின் அரசியல் முக்கியத்துவத்தை இழக்கும். நாட்டை திசை திருப்பவே பா.ஜ.க இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளது. தேர்தல் சீர்திருத்தம் என்ற பெயரில் திணிக்கப்படும் அருவெறுப்பை எதிர்த்து அனைத்து ஜனநாயக சக்திகளும் போராட வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் சமூக வலைதள பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

# காசாவின் பாடசாலை மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்;

## 20 பேர் பலி

காசாவின் பாடசாலை மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதலை மேற்கொண்டது. இந்த தாக்குதலில் குழந்தைகள் உட்பட 20 பேர் கொல்லப்பட்டனர்.



இந்நிலையில் தெற்கு காசா பகுதியில் உள்ள கான் யூனிஸ் நகருக்கு அருகில் உள்ள ஒரு பாடசாலையின் மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளமை கண்டறியப்பட்டது. அந்தப் பாடசாலையில் போரால் வீடுகளை இழந்த பலஸ்தீன மக்கள் ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண முகாமிட்டு தங்கி இருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது. இந்த தாக்குதலால் மேலும் சிலர் காயமடைந்ததாக பலஸ்தீனிய செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. அதேபோல இஸ்ரேலிய இராணுவம் வடக்கு காசா பகுதியில் நடாத்திய தாக்குதலில் பல குடியிருப்பு கட்டிடங்கள் இடிந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஜெருசலேம் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுத குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7ம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும் இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்திச் சென்றது. இதனையடுத்து ஹமாஸ் ஆயுதக் குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் 117 பணய கைதிகளை உயிருடன் மீட்டுள்ளது. அதேபோல் ஹமாஸ் ஆயுத குழுவினர்களால் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட பணய கைதிகளின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன .ஆனால் 101 இஸ்ரேலியர்கள் ஹமாஸ் வசம் பணய கைதிகளாக உள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதில் பலர் உயிரிழந்திருக்கலாம் எனவும் தகவல் வெளியாகியிருந்தது. அதேவேளை இந்த போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உட்பட 44,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அதேபோல் மேற்குக் கரையில் ஏற்பட்ட மோதலில் 700 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் இதன் காரணமாகவே இஸ்ரேல் தாக்குதலில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.




# தென்கொரியா ஜனாதிபதி பதவி நீக்கம்;

## மக்கள் கொண்டாட்டம்

தென்கொரிய ஜனாதிபதி பதவி விலகக் கோரி நாடு முழுவதும் போராட்டம் நடைபெற்று வந்தது. இதன் காரணமாக ஜனாதிபதி ஜுன் சுக் இயோல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டதையடுத்து தலைநகர் சியோலில் உற்சாகக் குரல் எழுப்பி பொதுமக்கள் கொண்டாடி வருகின்றனர்.



தென்கொரியாவில் எதிர்க்கட்சியினர் வடகொரியாவுடன் இணைந்து நாடாளுமன்றத்தை முடக்க சதித்திட்டம் தீட்டுவதாக ஜனாதிபதி ஜுன் சுக் இயோல் குற்றச்சாட்டி வந்தார்.

இதனைத் தொடர்ந்து கடந்த 3ம் திகதி அங்கு இராணுவ அவசர நிலையை அறிவித்தார். அவரது இந்த முடிவுக்கு ஆளும் கட்சியிலேயே எதிர்ப்பு கிளம்பியதால் அவசர நிலை கைவிடப்பட்டது. எனினும் ஜனாதிபதி பதவி விலகக் கோரி நாடு முழுவதும் போராட்டம் நடைபெற்று வந்தது. அதன் ஒரு பகுதியாக போராட்டக்காரர்கள் நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டனர். இதனால் இரண்டாவது முறையாக ஜனாதிபதிக்கு எதிரான பதவி நீக்க தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

அதில் மொத்தமாக உள்ள 300 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 204 பேர் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனையடுத்து ஜனாதிபதி ஜுன் சுக் இயோல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். மேலும் இடைக்கால ஜனாதிபதியாக பிரதமர் ஹான் டக் சூ நியமிக்கப்பட்டார். இதனையடுத்து ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யப்பட்டதை தலைநகர் சியோலில் உற்சாகக் குரல் எழுப்பி பொதுமக்கள் கொண்டாடி வருகின்றனர். அதே சமயம் மக்களை அமைதி காக்கும்படி அங்குள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### கருங்கடலில்

# ரஷ்யாவின் 2 எண்ணெய் கப்பல்கள் சேதம்

கருங்கடலில் 29 பணியாளர்களுடன் சென்ற இரண்டு ரஷ்ய எண்ணெய் கப்பல்கள் கடுமையாக சேதமடைந்துள் ளதாகவும், அவற்றில் இருந்து எண்ணெய் கசிந்து வருவதாகவும் ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ரஷ்யாவின் தெற்கு போக்குவரத்து வழக்குரைஞர் அலுவலகத்தால் டெலி கிராமில் ஒரு வீடியோ வெளியிடப்பட்டது. அந்த வீடியோவில், பலத்த புயலுக்கு மத்தியில் கப்பல்களில் ஒன்று பாதியா க உடைந்து மூழ்கியுள் ளது, கடலில் எண்ணெய் கசிவின் சுவடுகள் தென்படுகி ன்றன.



பிபிசி செய்திப்பிரி வினரால் அந்த வீடியோவை சரிபார்க்க முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த கப்பலில் இருந்த ஊழியர்களில் ஒருவர் இறந்திருக்கலாம் எனவும் இரண்டாவது கப்பல் சேதம் அடைந்து மெதுவாக நகர்ந்ததாக செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் 3 இந்திய மாணவர்கள் கொலை

கனடாவில் இந்திய மாணவர்கள் 3 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.




வெறுப்பு குற்றம் காரணமாக இந்த சம்பவங்கள் நடைபெறுவதால், இந்திய ர்கள் எச்சரிக்கையுடன் இருக்கு ம்படி மத்திய அரசு அறிவுறுத்தி யுள்ளது. காலி ணஸ்தான் தீவிரவாதிகளுக்கு கனடா ஆதரவு தெரிவித்து, இந்தியா மீது குற்றம் சுமத்தியதால் இந்தியா – கனடா உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதன் காரண மாக ஏற்பட்ட வெறுப்பில் கனடாவில் 3 இந்திய மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கனடா ஊடகத்தில் வெளியாகும் செய்தி, இந்திய இறையாண்மை விடயத்தில் வெளிநாட்டு தலையீடு போன்றது. இந்தியா பற்றி அவதூ று தகவல்களை கனடா ஊடகங்கள் தெரிவிப்பதற்கு இது மற்றொரு உதாரணம். இந்திய விசா வழங்குவது நமது இறையாண்மையுடன் தொடர்புடைய செயல்பாடு. இந்திய ஒற்றுமையை குறைத்து மதிப்பிடுபவர்களுக்கு விசா மறுப்பது எங்களின் சட்டப்பூர்வ உரிமை.

கனடாவில் இந்திய மாணவர்கள் 3 பேர் படுகொலை செய்யப்பட்டது கொடூரமான சோகமாகும் என வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

# மயோட்டே தீவில் புயல்

சனிக்கிழமையன்று பிரான்சின் இந்தியப் பெருங்கடல் பகுதியான மயோட்டேயைத் (ஆயலழவவந) தாக்கிய புயலில் சிக்கி உயிரிழந்தவர்கள் 11 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் 200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

மீட்புப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் புயல் தாக்கத்தினால் மயோட்டே முழுவதும் பல வீடுகளில் சிக்கியவர்கள் இன்னும் மீட்கப்படாமல் உள்ளனர். எனவே புயல்மழையால் கிட்டத்தட்ட 1000 பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. சிடோ சூறாவளி மணிக்கு 225 கிலோ மீற்றர் வேகத்தில் கடந்து சென்றதுடன், மயோட்டேயை முழுவதுமாக தரைமட்டமாக்கியது. ஏறக்குறைய ஒரு நூற்றாண்டில் மடகாஸ்கருக்கு வடக்கே பிரெஞ்சு இந்தியப் பெருங்கடல் தீவுக்கூட்டத்தைத் தாக்கிய மிகத் தீவிரமான புயலாக மயோட்டே மீது புயல் வீசியதாக பிரான்ஸ் வானிலை ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது. பிரெஞ்சு உள்துறை அமைச்சர் புருனோ ரீடெய்லியோ குறைந்தது 11 பேர் சூறாவளி தாக்கம் காரணமாக உயிரிழந்ததாக ஆரம்பத்தில் தெரிவித்தார். பின்னர், இறப்பு எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளதாக மயோட் அதிகாரிகளின் தகவல்களை மேற்கோளிட்டு AFP செய்திச் சேவை தெரிவித்துள்ளது. ஆனால் உள்ளூர் ஊடகங்களுடன் பேசிய தீவின் அரசியற் தலைவர் Francois-Xavier Bieuville, புயல் தாக்கத்தினால் மயோட்டே முழுவதும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நிச்சயமாக நூற்றுக்கணக்கில் இருக்கும் என தெரிவித்தார். ஆனால் தற்போது புயல் மழைக்கு பலியானோரின் எண்ணிக்கை ஆயிரத்தை நெருங்கலாம். இறந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் சரியான எண்ணிக்கையினை கணிப்பது மிகவும் கடினமாக உள்ளது என மயோட் நிர்வாகி பிரான்காயிஸ் சேவியர் பியூவில்லி தெரிவித்தார்.

இதனிடையே, பிரெஞ்சு ஜனாதிபதி



இம்மானுவேல் மக்ரோன் மாயோட் மக்களுக்கு பிரான்ஸ் “உடன் இருக்கும்” என்றும் 250 மீட்புப் பணியாளர்களை அனுப்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மடகாஸ்கரின் வடமேற்கில் அமைந்துள்ள மயோட்டே ஒரு முக்கிய தீவு, கிராண்ட்-டெர்ரே மற்றும் பல சிறிய தீவுகளைக் கொண்ட ஒரு தீவுக்கூட்டமாகும். தீவின் 300,000 அல்லது அதற்கு மேற்பட்ட மக்களில் பெரும்பாலானவர்கள் உலோக தகரங்களைக் கொண்ட கூரைகளையுடைய குடிசைகளில் வாழ்கின்றனர்.

# பங்களாதேஷின் தேர்தல் தொடர்பான அறிவிப்பு

பங்களாதேஷ் காபந்து அரசாங்கம் 2025 ஆம் ஆண்டின் இறுதியில் அல்லது 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பொதுத் தேர்தலை நடத்தும் என இடைக்காலத் தலைவர் மொஹமட் யூனுஸ் நேற்று(16) அறிவித்தார்.

துல்லியமான வாக்காளர் பட்டியலை உறுதி செய்வதற்காக குறைந்தபட்ச சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டால், 2025 இன் பிற்பகுதியில் தேர்தல்கள் சாத்தியமாகும். எனினும், தேர்தல் சீர்திருத்த ஆணையகத்தின் பரிந்துரைகள் மற்றும் தேசிய ஒருமித்த கருத்து ஆகியவற்றின் அடிப்படையில் விரிவான சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டால், தேர்தலுக்கு கூடுதலாக ஆறு மாதங்கள் தேவைப்படலாம் என அவர் தெரிவித்தார்.

1971 இல் பங்களாதேஷ் உருவாவதற்கு வழிவகுத்த இந்தியாவுடனான போரில் பாகிஸ்தான் தோற்கடிக்கப்பட்ட வெற்றி தினத்தைக் குறிக்கும் வகையில் தொலைக்காட்சி உரையில் உரையாற்றும் போது 84 வயதான தலைவர் மேற்கண்டவாறு கூறினார். முன்னாள் பிரதமரும், அவாமி லீக் தலைவருமான ஷேக் ஹசீனா கடந்த ஆகஸ்ட் மாதம் மாணவர்களால் நடத்தப்பட்ட கிளர்ச்சியில் வெளியேற்றப்பட்டார்.

சிவில் சேவை வேலைகளில் ஒதுக்கீட்டை இரத்து செய்யக் கோரி ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமரின் அரண்மனைக்குள் நுழைந்ததை அடுத்து, 77 வயதான அவர் அண்டை நாடான இந்தியாவுக்கு ஹெலிகாப்டரில் தப்பிச் சென்றார். இதனையடுத்து காபந்து அரசாங்கத்திற்கு தலைமை தாங்கும் யூனுஸ், நாட்டின் தலைமை ஆலோசகரை நியமிக்க நிறைய அழுத்தங்களை எதிர்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# உகண்டாவில் மர்ம காய்ச்சல்; 300 பேர் பாதிப்பு

உகண்டா நாட்டின் புண்டிபுக் யோ மாவட்டத்தில் உடல் நடுக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மர்ம காய்ச்சலுக்கு சுமார் 300 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். உகண்டா மக்களினால் “டிங்கா டிங்கா“ என அழைக்கப்படும் இந்த மர்ம காய்ச்சல் பெரும்பாலும் பெண்களைத்தான் பாதிப்பதாக தெரிவிக்கப்படு கின்றது. இந்த நோயினால் பாதிக்கப்பட்டோருக்கு காய்ச்சலும் அதிகமான உடல் நடுக்கமும் ஏற்பட்டு எழுந்து நடப்பது கூட கடினமானதாக மாறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுவரையில் இந்த நோயினால் எந்த ஒரு உயிரிழப்பும் ஏற்படவில்லை எனவும் இதற்காக எதிர்ப்பு சக்தி மருந்துகள் கொடுக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் நோய் பரவிய மாவட்ட த்தின் சுகாதாரத் துறை மருத்துவர் தெரிவித்துள்ளார். இந்த நோயினால் பாதிக்கப்பட்டோர் ஒருவார காலத்திற்குள் குணமடைந்து விடுவதாகவும் புண்டிபுக்யோ மாவட் டத்தை தவிர வேறு எங்கும் இந்த நோய் பரவவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த நோய்க்கான மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சகத்திடம் ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ள நிலையில் விரைவில் இந்த நோய் குறித்த அதிகாரப்பூர்வ தகவல்கள் வெளியாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# துருக்கியில் தவித்த 400 விமான பயணிகள் மீட்பு

கடந்த 4 நாட்களாக துருக்கியில் தவித்த 400 விமான பயணிகள் இரண்டு விமானங்களில் பத்திரமாக நேற்று இந்தியாவிற்கு திருப்பி அனுப்பப்பட்டனர். கடந்த 12ம் திகதி துருக்கியின் இஸ்தான்புல்லில் இருந்து 400 பயணிகளுடன் இண்டிகோ விமானம் ஒன்று இந்தியா புறப்படத் தயாராக இருந்தது.

ஆனால் அந்த விமானம் திடீரென இரத்து செய்யப்பட்டது. அதனால் 400 பயணிகளும் துருக்கியில் சிக்கிக் கொண்டனர். தொடர் முயற்சிக்கு பின்னர் தனித்தனி விமானங்களில்



அவர்களை இந்தியாவுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. முதற்கட்டமாக 200 பயணிகளுடன் புறப்பட்ட ஒரு விமானம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு டெல்லியை சென்றடைந்தது.

அதேபோல் இரண்டாவது விமானம் அடுத்தநாள் அதிகாலை மும்பை விமான நிலையத்தில் 200 பயணிகளுடன் தரையிறங்கியது. மேலும், இண்டிகோ விமானம் சர்வர் செயலிழந்திருப்பது குறித்து டெல்லியின் ஐஜிஐ விமான நிலைய அதிகாரிகள் விசாரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மகளிர் ஐபிஎல் 2025 ஏலம்

Sports விளையாட்டு

## ஐந்து அணிக்காக 9.05 கோடி ரூபா செலவு சிம்ரன் ஷேக்கிற்கு 1.90 கோடி



மகளிர் ஐபிஎல் 2025க்கான ஏலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (15) பெங்களூரில் நிறைவடைந்தது.

ஏலத்தில் 19 வீராங்கனைகளை வாங்க ஐந்து அணிகள் 9.05 கோடி செலவிட்டுள்ளன.

குஜராத் ஜெயன்ட்ஸ் அணி சிம்ரன் ஷேக்கை 1.90 கோடிக்கு வாங்கியதன் மூலம் இந்த ஆண்டு அதிக தொகைக்கு ஏலத்துக்கு வாங்கப்பட்ட வீராங்கனை என்ற பெருமையை பெற்றார்.

### ஏலத்தில் வாங்கப்பட்ட வீராங்கனைகள்

- சிம்ரன் ஷேக் – 1.90 கோடி (குஜராத் ஜெயன்ட்ஸ்)
- டீன்ட்ரா டாட்டின் – 1.70 கோடி (குஜராத் ஜெயன்ட்ஸ்)
- ஜி கமலினி – 1.60 கோடி (மும்பை இந்தியன்ஸ்)
- பிரேமா ராவத் – 1.20 கோடி (ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர்)
- என் சரணி – 55 இலட்சம் (டெல்லி கேப்பிடல்ஸ்)
- நாடின் டி கிளர்க் – 30 இலட்சம் (மும்பை இந்தியன்ஸ்)
- டேனியல் கிப்சன் – 30 இலட்சம் (குஜராத் ஜெயன்ட்ஸ்)
- அலனா கிங் – 30 இலட்சம் (உபி வாரியர்ஸ்)
- அக்ஷிதா மகேஸ்வரி – 20 இலட்சம் (மும்பை இந்தியன்ஸ்)
- நந்தினி காஷ்யப் – 10 இலட்சம் (டெல்லி கேப்பிடல்ஸ்)
- சாரா பிரைஸ் – 10 இலட்சம் (டெல்லி கேப்பிடல்ஸ்)
- ஜோஷிதா விஜே – 10 இலட்சம் (ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர்)
- சமஸ்கிருதி குப்தா – 10 இலட்சம் (மும்பை இந்தியன்ஸ்)
- கிராந்தி கவுட் – 10 இலட்சம் (உபி வாரியர்ஸ்)



- ஆருஷி கோயல் – 10 இலட்சம் (உபி வாரியர்ஸ்)
- பிரகாஷிகா நாயக் – 10 இலட்சம் (குஜராத் ஜெயன்ட்ஸ்)
- நிகி பிரசாத் – 10 இலட்சம் (டெல்லி கேப்பிடல்ஸ்)
- ஜாக்ரவி பவார் – 10 இலட்சம் (ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர்)
- ரக்வி பிஸ்ட் – 10 இலட்சம் (ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர்)



கண்டி விளையாட்டுக் கழகம் ரக்பி லீக் போட்டிகளை நடத்தி வருகிறது நேற்று முன்தினம் நித்தவெல மைதானத்தில் நடைபெற்ற முதல் சுற்று ரக்பி லீக் சம்பியன்ஷிப் போட்டியில் இடைவேளையின் போது 27-14 என முன்னிலை பெற்றிருந்த கண்டி 61 புள்ளிகள் (6 கோல்கள், இரண்டு ட்ரைகள் மற்றும் 3 பெனால்டிகள்) 14 (2 கோல்கள்) என்ற கணக்கில் ஸ்ரீ லயன்ஸ் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்து சகல சுற்றிலும் முன்னிலை வகித்தனர்.

## பும்ராவை தரக்குறைவாக பேசிய வர்ணனையாளர் மன்னிப்பு கோரினார்





இந்திய அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் பும்ராவை இனவெறியுடன் பேசியதாக குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில், பெண் வர்ணனையாளர் இஷா குகா மன்னிப்பு கேட்டுள்ளார்.

பும்ராவை பாராட்டுவதற்கு தவறான வார்த்தையை பயன்படுத்தியதாக கூறியுள்ள அவர், இனி இவ்வாறு நடக்காது என்றும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா அணிக்கெதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி விளையாடி வருகிறது. காபா மைதானத்தில் நடைபெற்று வரும் இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆடிய அவுஸ்திரேலிய அணி ட்ராவிஸ் ஹெட் மற்றும் ஸ்டீவ் ஸ்மித் இருவரின் அபார சதத்தால் 445 ஓட்டங்களை குவித்தது. இந்திய அணி தரப்பில் நட்சத்திர வீரர் பும்ரா 28 ஓவர்களை வீசி 76 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்து 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இதனிடையே நேற்று முன்தினம் ஆட்டத்தின் போது பும்ரா 5 விக்கெட்டுகளை வீழ்த்திருந்தார். அப்போது வர்ணனை செய்து கொண்டிருந்த இங்கிலாந்தைச் சேர்ந்த பெண் வர்ணனையாளர் இஷா குகா, பும்ரா மீது இனவெறியை வெளிப்படுத்தி இருந்தார். பும்ராவை MVP என்று பாராட்டிய இஷா குகா, MVP என்பதற்கு ஆழளவ Valuable Primate என்று அர்த்தம் கொடுத்தார்.

Primate என்றால் குரங்கு இனத்தை சேர்ந்த உயிரினமாகும். இதனால் பும்ராவை இனவெறியுடன் பேசியதாக ரசிகர்கள் கொந்தளித்தனர். இஷா குகாவை இனி வர்ணனைக்கு அனுமதிக்கக் கூடாது என்று சமூக வலைத்தளங்களில் விளாசி தள்ளினர். இதனையறிந்த இஷா குகா, நேற்று ஆட்டத்தின் போது வெளிப்படையாகவே மன்னிப்பு கேட்பதாக தெரிவித்துள்ளார்.



## ஷஹிப் உல் ஹசனின் பந்து வீச்சுக்கு தடை

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஷஹிப் உல் ஹசன், சர்வதேச கிரிக்கெட் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நடத்தப்படும் தேசிய மற்றும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பந்துவீச தடை விதிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபைகளால் நடத்தப்பட்ட போட்டிகளில் ஷஹிப் உல் ஹசனுக்கு பந்து வீச தடைவிக்கப்பட்டது.

கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்ற இங்கிலாந்து கிளப் கிரிக்கெட் போட்டியில் அவர் பந்தை வீசியதாக குற்றம் சாட்டப்பட்டது.

அதன்படி, ஷஹிப் உல் ஹசனின் பந்துவீச்சு தொடர்பில் மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நடைபெற்று வரும் இலங்கை ரி 10 தொடரில் ஷஹிப் விளையாடி வருகிறார்.

கோல் மார்வெல்ஸ் அணிக்காக விளையாடி வரும் ஷாகிப், கடந்த இரண்டு போட்டிகளில் பந்துவீசுவதை தவிர்த்து வந்தார்.

டெஸ்ட் மற்றும் ரி20 சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றாலும், ஷாஹிப் உல் ஹசன் இன்னும் ஒருநாள் போட்டிகளில் பங்களாதேஷ் அணிக்காக விளையாடி வருகிறார்.

## பேருவளை உதைப்பந்தாட்ட சங்கத்தின் "தலைவர் கிண்ண" சுற்றுப் போட்டி



பீ.எம்.முக்தார்

பேருவளை உதைப்பந்தாட்டச் சங்கம் "தலைவர் வெற்றிக் கிண்ணத்திற்காக" நடாத்தும் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி எதிர்வரும் 21 பி.ப.3.00 மணிக்கு தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பேருவளை கிரேட் ஸ்டார் உதைப்பந்தாட்ட கழகமும் தர்கா நகர் ரெட் ஸ்டார் உதைப்பந்தாட்ட கழகமும் இறுதிப் போட்டியில் மோத உள்ளதாக சங்க செயலாளர் எம்.எஸ்.எம்.சீனான் தெரிவித்தார்.

பேருவளை உதைப்பந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 20 விளையாட்டு கழகங்கள் இச் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றியதுடன் இறுதிப் போட்டிக்கு மேற்படி இரு அணிகளும் தெரிவாகின.

இலங்கை உதைப்பந்தாட்டச் சம்மேளன தலைவர் எம்.ஜஸ்வர் உமர் பிரதம அதிதியாகவும் உப தலைவரும் களுத்துறை உதைப்பந்தாட்ட சங்க தலைவருமான டொக்டர் மனில் பெர்ணாந்து கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## நியூசிலாந்து கிரிக்கெட் வீரர் கென்வேக்கு பெண் குழந்தை

நியூசிலாந்து கிரிக்கெட்டின் முன்னணி வீரர் டெவன் கென்வே தனது நீண்டகால காதலியான கிம் வாட்சனை கடந்த 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தென்னாப்பிரிக்காவில் திருமணம் செய்து கொண்டார். இத்தம்பதிக்கு தற்போது பெண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தைக்கு ஒலிவியா கென்வே என பெயர் சூட்டியுள்ளனர்.



இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 17ம் திகதி செவ்வாய்க்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.